# தினபூமி

thinaboomi.com

பூமி: 21 சுற்று: 203 ஆடி 01

RNI Regn. No. 61494/94

வேலூர், வியாழன், ஜூலை 17, 2025

சென்னை • மதுரை • திருச்சி • கோவை • நெல்லை • சேலம் • வேலூர் • புதுச்சேரி

பக்கம் 8 ₹ 3.00




**ரஷ்யாவிடம் வர்த்தகம் செய்தால்... இந்தியா, சீனா, பிரேசிலுக்கு நேட்டோ கடும் எச்சரிக்கை**

...2-ம் பக்கம்

**போர்களை எதிர்கொள்ள தொழில்நுட்பம் தேவை: முப்படை தலைமை தளபதி**

...3-ம் பக்கம்

**லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்: கிரிக்கெட் போட்டிகள் நடைபெறும் தேதி அறிவிப்பு**

...6-ம் பக்கம்

### மயிலாடுதுறையில் அரசு விழா: ரூ.113.51 கோடி மதிப்பில்

# 12 புதிய திட்டப்பணிகளுக்கு முதல்வர் ஸ்டாலின் அடிக்கல்

## * ரூ.48.17 கோடி மதிப்பிலான 47 முடிவுற்ற பணிகள் திறப்பு
## * ரூ.271.24 கோடியில் 54,461 பேருக்கு நலத்திட்ட உதவிகள்

மயிலாடுதுறை, ஜூலை 17-

**மயிலாடுதுறையில் நடைபெற்ற அரசு விழாவில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் 48 கோடியே 17 லட்சம் ரூபாய் செலவில் 47 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 113 கோடியே 51 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 12 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 271 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை 54,461 பயனாளிகளுக்கு வழங்கினார்.**

**அவதூறுகளைப் பரப்ப**

பின்னர் நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியது: "நேற்று (நேற்று முன்தினம்) சிதம்பரத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாமை தொடங்கி வைத்திருக்கிறேன். தமிழ்நாடு முழுவதும் நகரங்கள், கிராமங்கள் என்று ஆங்காங்கு முகாம்கள் அமைத்து 46 சேவைகளை வழங்குகிறோம். இந்தத் திட்டத்தை அறிவித்தவுடன், இதை பார்த்து பயந்து போய் எதிர்க் கட்சித் தலைவர் பழனிசாமி, இந்தத் திட்டத்தைப் பற்றி அவதூறுகளைப் பரப்பத் தொடங்கி இருக்கிறார். அவரே போதும் - இந்தத் திட்டத்தில் எத்தனை சேவை இருக்கிறது - என்னென்ன செய்யப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார். மொத்தத்தில் விமர்சனம் என்கின்ற பெயரில், நமக்கு விளம்பரத்தை எடப்பாடி பழனிசாமி செய்து கொண்டிருக்கிறார். அதற்காக நன்றி.

**தீர்வு கண்டிருக்கிறோம்**

ஆனால், இந்தத் திட்டத்தை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதனால்தான் வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசுகிறார். "தேர்தலுக்கு முன்பே ஊர் ஊராகச் சென்று ஒரு பெட்ஷீட்டை போட்டு, உட்கார்ந்து மனு வாங்கினாரே ஸ்டாலின் அதெல்லாம் என்னானது?" என்று அதிமேதாவி மாதிரி பேசுகிறார். பெட்ஷீட் போட்டு வாங்கிய மனுக்களை எக்செல் ஷீட்களாக மாற்றி, ஒர்க் ஷீட்டாக மாற்றி தீர்வு கண்டிருக்கிறோம்.

**வீடு, வீடாக செல்கிறோம்**

அது தெரியாமல் நான்கு வருடமாக குடும்பத்தோடு ஸ்டாலின் இருந்தார் என்று சொல்கிறார். என் குடும்பத்தைப் பொறுத்தவரைக்கும், தமிழ்நாட்டு மக்கள் தான் என்றும் அவர்களோடுதான் இருப்பேன், இருப்பேன், இருக்கிறேன், இருந்தே தீருவேன். அதில் எந்த மாற்றமும் கிடையாது. உங்களுடைய ஸ்டாலின் பொறுத்தவரைக்கும், உங்களுடன் ஸ்டாலின் என்ற திட்டத்திற்காக வீடு, வீடாக செல்கிறோம் அவரது கட்சியைச் சேர்ந்தவர்கள் குடும்பத்திலேயே விசாரித்து பார்க்கட்டும். கட்சி பேதம் பார்க்காமல், தமிழ்நாட்டு மக்களை தன் குடும்பமாக நினைக்கும் ஆட்சிதான், இந்த ஸ்டாலின் ஆட்சி.

**பெண்களுக்கான திட்டம்...**

மகளிர் உரிமைத் தொகை உள்ளிட்ட அனைத்துத் திட்டங்களும், அ.தி.மு.க. குடும்பங்களைச் சேர்ந்த மகளிருக்கும் சென்றடைகிறது. மறுக்க முடியுமா? மாதந்தோறும் மகளிர் உரிமைத் தொகை சரியாக வங்கி கணக்கில் விழுகிறது. தேதி மாறாமல், நாள் தவறாமல் சரியாக வந்து கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, பேருந்தில் கட்டணமில்லாத நம்முடைய விடியல் பயணம் மூலமாக மாதம் 800 ரூபாய்க்கு மேல் மகளிரால் சேமிக்க முடிகிறது என்று சொல்கிறார்கள். இந்த இரண்டு திட்டமும் பெண்களின் பொருளாதார - சமூக விடுதலைக்கு அடிப்படையாக அமைந்திருக்கிறது.

**லேப் டாப் திட்டம்...**

திராவிட மாடல் அரசின் நான்காண்டு ஆட்சியில், இது போல பல திட்டங்களின் பயன்களை என்னால் சொல்ல முடியும். பழனிசாமி தன்னுடைய நான்காண்டு ஆட்சியில் என்ன செய்தார்? இதே மயிலாடுதுறையில், நாம் சிலை அமைத்திருக்கும் மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் பெயரிலான ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டத்தை 2018-ம் ஆண்டோடு நிறுத்தியவர்தான் பழனிசாமி. மாணவர்களுக்கான லேப் டாப் திட்டத்தை நிறுத்தியவரும் அவர்தான். அவர் எனக்கு டாட்டா - பை-பை சொல்கிறாராம்.

**நிரந்தரமாக குட்பை...**

'பத்து தோல்வி பழனிசாமி..'. 2019-ம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டு மக்கள் தொடர்ச்சியாக உங்களுக்கு டாட்டா - பை-பை சொல்லிக் கொண்டுதான் இருக்கிறார்கள். இந்தத் தேர்தலில் உங்களுக்கு நிரந்தரமாக குட்பை சொல்லப் போகிறார்கள். இனி மக்கள் ஒருபோதும் உங்களை நம்பப் போவதில்லை. அட... ஏன் உங்கள் கட்சிக்காரர்களே தேர்தல்

(கடைசி பக்கம் பார்க்க)

> **கச்சத்தீவை தாரைவார்த்துவிட்டதாக தொடர்ந்து அரசியல் பேசி வருகிறார்கள். கச்சத்தீவை மீட்க கடந்த 10 ஆண்டுகளாக மத்திய பா.ஜ.க. அரசு ஒன்றுமே செய்யவில்லை. கச்சத்தீவை தாரைவார்ப்பது மத்திய அரசின் அதிகாரத்திற்கு உட்பட்ட ஒன்று என்று அனைவரும் அறிவர். கச்சத்தீவு பிரச்சனையில் பிரதமர் மோடி நேரடியாக தலையிட வேண்டும்.**
>
> **-முதல்வர் மு.க.ஸ்டாலின்**



● மயிலாடுதுறையில் நேற்று நடைபெற்ற அரசு விழாவில் ரூ.48 கோடியே 17 லட்சம் செலவில் 47 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து ரூ.113 கோடியே 51 லட்சம் மதிப்பீட்டிலான 12 புதிய திட்டப்பணிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார். இதில் அமைச்சர்கள் கே.என்.நேரு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சிவ.வீ.மெய்யநாதன், டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.சுதா, சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.பன்னீர்செல்வம், நிவேதா எம்.முருகன், எஸ்.ராஜ்குமார், கலெக்டர் ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த், தாட்கோ தலைவர் இளையராஜா உள்ளனர்.

### மருத்துவக்கழிவுகளை கொட்டினால் குண்டர் சட்டம்:

# சட்டத்திருத்தம் அமலுக்கு வந்ததாக அரசு அறிவிப்பு

சென்னை, ஜூலை 17-

**நீர் நிலைகள், பொது இடங்களில் மருத்துவக் கழிவுகளைக் கொட்டினால் குண்டர் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற சட்டம் ஜூலை 8ம் தேதி முதல் சட்டத் திருத்தம் அமலுக்கு வந்துள்ளதாக அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.**

தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்படும் மசோதாக்களுக்கு கவர்னர் ஆர்.என். ரவி ஒப்புதல் அளித்து வருகிறார். அந்த அடிப்படையில் கடந்த சட்டசபை கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டு, அவருக்கு அனுப்பட்டு இருந்த மசோதாக்களில் 5 மசோதாக்களுக்கு கவர்னர் கடந்த மாதம் 13-ம் தேதி ஒப்புதல் அளித்தார்.

அதில் இரண்டாவது மசோதா, தமிழகத்தில் பல்வேறு குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவோர்கள் மீது குண்டர் சட்டம் பாய்கிறது. அந்த சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டு, அதில் மருத்துவக் கழிவுகளை கொட்டுவோர்களும் சேர்க்கப்பட்டு உள்ளனர். அதன்படி இனி உயிரி-மருத்துவக் கழிவுகளை (பயோ மெடிக்கல் வேஸ்ட்) முறையற்று குவித்து பொது சுகாதாரத்திற்கும், சுற்றுச்சூழலுக்கும் கடும் அபாயத்தை ஏற்படுத்துவோரும் குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவார்கள். வெளிமாநிலத்தில் இருந்து தமிழகத்தில் வந்து மருத்துவக் கழிவுகளை கொட்டுவோருக்கும் இது பொருந்தும். எனவே மருத்துவ கழிவுகளை இனி கண்டபடி கொட்டக்கூடாது. முறைப்படி அகற்ற வேண்டும். இந்த மசோதா கவர்னர் ஒப்புதல் கொடுத்தவுடன் சட்டமாகி அமலுக்கு வந்துவிட்டது.

இந்த நிலையில், நீர் நிலைகள், பொது இடங்களில் மருத்துவக் கழிவுகளைக் கொட்டினால் குண்டர் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற சட்டம் ஜூலை 8ம் தேதி முதல் சட்டத் திருத்தம் அமலுக்கு வந்துள்ளதாக அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, தமிழகத்தில் பொது இடங்களில் உயிரி மருத்துவ கழிவுகளை முறையற்ற முறையில் குவித்தாலோ, அண்டை மாநிலங்களில் இருந்து கொண்டு வந்து தமிழகத்தில் மருத்துவக் கழிவுகளைக் கொட்டினாலோ உயிரி மருத்துவக் கழிவு மேலாண்மை விதிகளை மீறியதாகக் கருதி, நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும் ஆணைக்கு சமமாக விசாரணையின்றி குற்றம் செய்தவரை சிறைவைக்க முடியும். இதில் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு எதிராக பொது அறிவிப்பும் வெளியிடப்பட்டு, அத்தகைய நபர்களின் சொத்துகளையும் பறிமுதல் செய்ய இந்த சட்டத் திருத்தம் வகை செய்கிறது.

### கட்டிடங்களுக்கு சீல் வைக்க

# ஊராட்சி நிர்வாக அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கியது தமிழக அரசு

சென்னை, ஜூலை 17-

**கட்டிடங்களுக்கு சீல் வைக்க ஊராட்சி நிர்வாக அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கி தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுளளது. இதுதொடர்பாக அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கு தமிழ்நாடு அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.**

கிராம ஊராட்சிகளில் அனுமதி பெறாமல் கட்டப்படும் கட்டிடங்களை மூடி சீல் வைக்க ஊராட்சிகளின் நிர்வாக அலுவலர்களுக்கு அதிகாரம் உள்ளதாக அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கு தமிழ்நாடு அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

கிராம ஊராட்சி நிர்வாக அலுவலரின் அனுமதி இன்றி கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளும் நபர்களிடம் இருந்து உரிய நிலம் தொடர்பான ஆவணங்கள் மற்றும் கட்டட வரைபட அனுமதிச் சான்றினை கோரி அறிவிப்பினை வழங்க வேண்டும்.

அனுமதி இன்றி கட்டப்படும் கட்டுமானங்களை நேரடியாக அள ஆய்வு செய்ய வேண்டும். அனுமதி பெறாமல் கட்டப்பட்ட கட்டடம் தொடர்ந்து கட்டப்பட்டுக் கொண்டிருந்தால் அதை பூட்டி முத்திரை இடும் அதிகாரம் ஊராட்சிகளின் நிர்வாக அலுவலருக்கு உள்ளது என ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை தெரிவித்துள்ளது.

## மயிலாடுதுறை மாவட்டத்திற்கு 8 புதிய அறிவிப்புகள் வெளியீடு

மயிலாடுதுறை, ஜூலை 17-

**மயிலாடுதுறை மாவட்டத்திற்கு 8 புதிய அறிவிப்புகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்.**

மயிலாடுதுறை மாவட்டத்திற்கு 8 புதிய அறிவிப்புகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். மயிலாடுதுறையில் சீரான வாகன போக்குவரத்தை உறுதி செய்யும் நீடூர் ஊராட்டிசியில் 85 கோடியில் புதிய ரெயில்வே மேம்பாலம். குத்தாலம் வாய்க்கால் ரூ.7 கோடி செலவில் புனரமைக்கப்படும். வெள்ளக்கோவில் கிராமங்களில் ரூ.8 கோடியில் மேம்படுத்தும் பணி மேற்கொள்ளப்படும்.

பூம்புகார் மீன்பிடி துறைமுகத்தில் தூர் வாரும் பணி மேற்கொள்ளப்படும். சீர்காழியில் புதிய நகராட்சி அலுவலகம் ரூ.5 கோடியில் அமைக்கப்படும். தரங்கம்பாடி-ஆடுதுறை சாலை ரூ.45 கோடியில் இருவழிச்சாலையாக மேம்படுத்தப்படும். சீர்காழி, திருமுல்லைவாயல் பகுதிகளில் மேற்கூரை நீட்டிப்பு, தூர்வாரும் பணிக்கு ஆய்வு மேற்கொள்ள நடவடிக்கை. சீர்காழி நகராட்சியில் தேர் வீதிகளில் ரூ.8 கோடி மதிப்பில் வடிகால் வசதி மேற்கொள்ளப்படும்.

### இளநிலை எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ். படிப்புகளுக்கு

# ஜூலை 30-ல் மருத்துவ கலந்தாய்வு தொடக்கம்

சென்னை, ஜூலை 17-

**எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ். படிப்புகளுக்கான கலந்தாய்வு ஜூலை 30 ஆம் தேதி தொடங்கும் என் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.**

அமைச்சர் மா.சுப்பிரமணியன் புதன்கிழமை (ஜூலை 16) சைதாப்பேட்டை, 140 ஆவது வார்டு, சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் ரூ.5.25 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் நவீன கலையரங்கம் கட்டுமானப் பணி, ரூ.3.55 கோடி மதிப்பீட்டில் ரெட்டிக்குப்பம் சாலை மற்றும் கோடம்பாக்கம் சாலையில் 455 மீட்டர் மழைநீர் வடிகால்வாய் கட்டுமானப் பணி மற்றும் 142 ஆவது வார்டு, திடீர் நகரில் ரூ.61 லட்சம் மதிப்பீட்டில் கழிவுநீர் ஓரக்கல்வாய் கட்டுவதற்கான கட்டுமானப் பணியினை தொடங்கி வைத்து ஆய்வு செய்தார்.

பின்னர் அவர் செய்தியாளர்களுடன் பேசுகையில், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ். மருத்துவப் பட்டப்படிப்புகளுக்கு கடந்த ஜூன் மாதம் 6 ஆம் தேதியில் இருந்து ஜூன் 29 ஆம் தேதி வரை விண்ணப்பங்கள் பெறப்பட்டது. அதில் 72,743 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது. இந்த விண்ணப்பங்கள் ஆய்வு செய்யும் பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த விண்ணப்பங்களில் ஒரு சில விண்ணப்பங்கள் சான்றிதழ்களை இணைக்க மறந்து விண்ணப்பத்தவர்களுக்கு இரண்டு நாள்கள் காவ அவகாசம் வழங்கப்பட்டது. 2 நாள்களில் விடுப்பட்ட சான்றிதழ்களை இணைத்து மீண்டும் விண்ணப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு தகுதி பட்டியல் வெளியிடப்படும்.

தகுதி பட்டியல் சரிபார்க்கப்பட்டு வரும் நிலையில், 20 மாணவர்கள் தங்களுடைய விண்ணப்பங்களில் போலிச் சான்றிதழ்களை இணைத்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது. எனவே அந்த 20 மாணவர்கள் கலந்தாய்வில் கலந்து கொள்ளவதற்கு தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் 3 ஆண்டுகளுக்கு மருத்துவ கலந்தாய்வில் கலந்து கொள்வதற்கு தடை விதித்து நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. மேலும், அவர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளது.

20 மாணவர்களில் 7 பேர் பிறப்பிட சான்றிதழ்களை போலியாக தந்திருக்கிறார்கள். 9 பேர் பிறப்பிடம் மற்றும் சாதிச்சான்றிதழ்களை போலியாக தந்திருக்கிறார்கள். 4 மாணவர்கள் என்ஆர்ஜ

(கடைசி பக்கம் பார்க்க)

### சென்னை, தேனி, தென்காசி உள்ளிட்ட

# 11 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு

சென்னை, ஜூலை 17-

**தமிழகத்தில் சென்னை, நீலகிரி, தேனி, தென்காசி, வேலூர், திருவண்ணாமலை உள்ளிட்ட 11 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**


இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழகம் நோக்கி வீசும் மேற்கு திசைக் காற்றில் வேக மாறுபாடு நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் வரும் 22-ம் தேதி வரை ஒரு சில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஓரிரு இடங்களில் பலத்த தரைக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிமீ வேகத்தில் வீசக்கூடும்.

தமிழகத்தில் இன்று (17-ம் தேதி) கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி, தேனி, தென்காசி, வேலூர், திருவண்ணாமலை, ராணிபேட்டை, திருவள்ளூர், காஞ்சிபுரம், சென்னை மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. 18-ம் தேதி கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி, வேலூர், ராணிபேட்டை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. 19-ம் தேதி நீலகிரி மற்றும் கோவை மாவட்ட மலைப்பகுதிகளில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், திருவள்ளூர், காஞ்சிபுரம், ராணிபேட்டை, தேனி, திண்டுக்கல் மற்றும் தென்காசி மாவட்டங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

20-ம் தேதி நீலகிரி மற்றும் கோவை மாவட்ட மலைப்பகுதிகளில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், தேனி, தென்காசி, ராணிப்பேட்டை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும், 21, 22 தேதிகளில் கோவை மாவட்ட மலைப்பகுதிகள், திருநெல்வேலி, நீலகிரி, தேனி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
| --- | --- |
| 63.57 | 16.25 |
| புள்ளிகள் 82,634.48 | புள்ளிகள் 25,212.05 |



**தங்கம்**
1 சவரன் ₹72,800
1 கிராம் ₹9,100

**வெள்ளி**
1 கிலோ ₹120,000
1 கிராம் ₹120.00

**டாலர்** ₹86.03

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24

ரஷ்யாவிடம் வர்த்தகம் செய்தால்...

# இந்தியா, சீனா, பிரேசிலுக்கு நேட்டோ கடும் எச்சரிக்கை

**வாஷிங்டன், ஜூலை 17-**

பிரேசில், சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் ரஷ்யாவுடன் தொடர்ந்து வணிகம் செய்தால் கடுமையான பொருளாதாரத் தடைகளை சந்திக்க நேரிடும் என்று நேட்டோ பொதுச் செயலாளர் மார்க் ரூட்டே எச்சரித்துள்ளார்.



அமெரிக்க செனட்டர்களைச் சந்தித்த பிறகு செய்தியாளர்களிடம் பேசிய நேட்டோ பொதுச் செயலாளர் மார்க் ரூட்டே, " சீனா, இந்தியா, பிரேசில் ஆகிய நாடுகளின் தலைவர்கள் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினிடம் உக்ரைன் போர் நிறுத்தத்துக்கான சமாதானப் பேச்சுவார்த்தைகளை தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென வலியுறுத்த வேண்டும். பேச்சுவார்த்தையை தீவிரமாக எடுத்துக்கொள்ளாத ரஷ்யாவுடன் தொடர்ந்து வர்த்தகம் செய்து அவர்களின் எண்ணெய் மற்றும் எரிவாயுவை வாங்கினால், உங்களுக்கு 100 சதவீதம் வரி விதிக்கப்படும். இந்த மூன்று நாடுகளும் இதனை முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டும். ஏனெனில் இந்த வரிகள் உங்களை மிகவும் கடுமையாக பாதிக்கும்.

எனவே இந்த மூன்று நாடுகளின் தலைவர்களும் விளாடிமிர் புதினுக்கு தொலைபேசி அழைப்பு விடுத்து, அமைதிப் பேச்சு வார்த்தைகளில் தீவிரமாக இருக்க வேண்டும் என்று அவரிடம் சொல்லுங்கள். இல்லையெனில் பிரேசில், இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் மீது மிகப்பெரிய பொருளாதார தடைகள் விதிக்கப்படும்" என்றார்

முன்னதாக, அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் உக்ரைனுக்கு புதிய ராணுவ உதவிகளை வழங்குவதாக அறிவித்தார். மேலும், ரஷ்யாவுடன் வர்த்தகம் செய்யும் நாடுகள் மீது கடுமையான வரிகளை விதிக்கப்போவதாகவும் அச்சுறுத்தல் விடுத்தார். அடுத்த 50 நாட்களுக்குள் உக்ரைனுடன் சமாதான ஒப்பந்தம் எட்டப்படாவிட்டால், ரஷ்யாவிடம் எண்ணெய் வாங்கும் நாடுகள் மீது பொருளாதார தடைகள் விதிக்கும் திட்டமும் உள்ளது என்று அவர் கூறினார்.

# காசா: நிவாரண பொருள் வழங்கும்போது கூட்ட நெரிசலில் சிக்கி 20 பேர் உயிரிழப்பு

**டெல் அவிவ், ஜூலை 17-**

காசாவில் நிவாரண பொருள் வழங்கும்போது கூட்ட நெரிசலில் ஏற்பட்டது. அப்போது 20 பேர் உயிரிழந்தனர்.

இஸ்ரேல் மீது கடந்த 2023-ம் ஆண்டு அக்டோபர் 7-ந்தேதி ஹமாஸ் அமைப்பு கொடூர தாக்குதல் நடத்தியது. இதில், ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டதுடன், நூற்றுக்கணக்கானோர் பணய கைதிகளாக சிறைபிடித்து செல்லப்பட்டனர். எனினும், போர்நிறுத்த ஒப்பந்தம் வழியாக சிலரை மீட்டது. இன்னும் 50 பேர் வரை விடுவிக்கப்படாமல் உள்ளனர். ஆனால் அவர்களில் பாதிபேர் பலியாகி இருக்க கூடும் என அஞ்சப்படுகிறது. இந்த சூழலில், காசாவுக்கு எதிராக இஸ்ரேல் போரில் இறங்கியது. ஓராண்டுக்கு மேலாக இஸ்ரேல் நடத்திய தாக்குதலில், காசா பகுதியில் 58 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் உயிரிழந்து உள்ளனர். 1 லட்சத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தும் உள்ளனர். இதனை காசா சுகாதார அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

இந்நிலையில், காசா முனை பகுதியில் இஸ்ரேல் ஆதரவு பெற்ற அமெரிக்க தொண்டு நிறுவனம் ஒன்று மக்களுக்கு நிவாரண பொருட்களை வழங்கும் பணியில் ஈடுபட்டு இருந்தது. அப்போது, கூட்ட நெரிசல் ஏற்பட்டதில், 20 பேர் அதில் சிக்கி உயிரிழந்தனர். இந்த நெரிசலின்போது ஏற்பட்ட வன்முறையில் ஒருவரையொருவர் தாக்கி கொண்டனர். இதில், கத்தியால் குத்தப்பட்டதில் ஒருவர் பலியானார். இதனால், மொத்தம் 21 பேர் பலியாகி உள்ளனர்.

# ரூ.2.4 கோடிக்கு ஆன்லைன் ஷாப்பிங் செய்த மூதாட்டி..!

**பீஜிங், ஜூலை 17-**

சீனாவின் ஜியாடிங் பகுதியை சேர்ந்த 66 வயது மூதாட்டி ஒருவர் ஆன்லைனில் மூலம் ரூ.2.4 கோடிக்கு ஷாப்பிங் செய்தார்.

இன்றைய இளையதலைமுறையினர், கடைக்கு சென்று பொருட்களை வாங்குவதைவிட ஆன்லைனில் விதவிதமான பொருட்களை வாங்குவதை வாடிக்கையாக வைத்திருக்கிறார்கள். இளம் பெண்கள், சிறுவர்கள் மட்டு மல்ல பெரியவர்களும் அதற்கு விதிவிலக்கல்ல என்பதை காட்டியிருக்கிறது ஒரு சீன மூதாட்டியின் ஆன்லைன் ஷாப்பிங் பட்டியல்.

சீனாவின் ஜியாடிங் பகுதியை சேர்ந்த வாங் என்ற 66 வயது பெண்மணி, தனியாக வசித்து வருகிறார். அவர் ஆன்லைனில் ஷாப்பிங் செய்து தனது பொழுதை கழிப்பதை வாடிக்கையாக வைத்துள்ளார். அவர் ஒரே ஆண்டில் ரூ.2.4 கோடிக்கு ஆன்லைன் மூலமாக பொருட்களை வாங்கிக் குவித்து உள்ளது அனைவரையும் வியக்க வைத்து உள்ளது. வீட்டில் எங்கு பார்த்தாலும் ஆன்லைனில் வாங்கப்பட்ட பொட்டலங்கள் அடுக்கி வைக்கப்பட்டு உள்ளன.

ஏராளமான பொட்டலங்கள் பிரித்து பார்க்கப்படாமலே உள்ளது. அப்படி பிரிக்கப்படாத பொருட்களுக்களை வைப்பதற்காக மற்றொரு வீட்டையும் வாடகைக்கு எடுத்து, வாங்கிய பொருட்களை குவித்து வைத்திருக்கிறார். பாட்டி பொருட்களை வாங்கிக் குவிப்பதை நிறுத்தவில்லை. பாட்டி குறித்த தகவல்கள் சமூக வலைத்தளத்தில் பரவி வருகிறது.

# கிண்டி ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் பசுமை பூங்கா அமைப்பதற்கு தடை

**சென்னை, ஜூலை 17-**

கிண்டி ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் பசுமை பூங்கா அமைக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

சென்னை வேளச்சேரி ஏரி வரத்து கால்வாய் ஆக்கிரமிப்பு மற்றும் ஏரியில் கழிவு நீர் கலப்பது தொடர்பான விவகாரத்தை சென்னையில் உள்ள தேசிய பசுமை தீர்ப்பாயம் தாமாக முன்வந்து வழக்காக எடுத்து விசாரித்து வருகிறது. இதுதொடர்பாக வேளச்சேரி ஏரி பாதுகாப்பு இயக்கத்தின் துணை தலைவர் குமாரதாசன் தாக்கல் செய்த மனுவையும் தீர்ப்பாயம் விசாரித்து வருகிறது.

இந்த மனு ஏற்கனவே விசாரணைக்கு வந்தபோது, 'கிண்டி ரேஸ்கோர்ஸ் மைதானத்தின் 118 ஏக்கர் இடத்தில் ஏரியை உருவாக்க முடியும். இதனால் மழை பாதிப்பில் இருந்து வேளச்சேரியை பாதுகாக்கலாம். ஆனால், 118 ஏக்கர் நிலம், பசுமை பூங்கா அமைக்க தோட்டக்கலை துறைக்கு மாற்றப்பட்டுள்ளது. ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் ஏன் ஏரி அமைக்கக்கூடாது? என்பது குறித்து தமிழக அரசின் தலைமைச் செயலாளர் விரிவான அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்' என உத்தரவிட்டது.

அந்த வழக்கு நீதிபதி புஷ்பா சத்யநாராயணா, நிபுணர்குழு உறுப்பினர் சத்யகோபால் ஆகியோர் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசின் தலைமை செயலாளர் தரப்பில் அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை. இதைத் தொடர்ந்து தீர்ப்பாயம் பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது:-

பசுமை பூங்காவை மேம்படுத்துவதற்காக அந்த நிலம் சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளதா? என்பது தெரியவில்லை. வருவாய்த்துறை மூலமோ அல்லது தோட்டக்கலை துறை மூலமோ இந்த நிலம் முறையாக தங்களிடம் ஒப்படைக்கப்படவில்லை என சென்னை மாநகராட்சி தரப்பில் ஆஜரான வக்கீல் தெரிவித்துள்ளார். எப்படியிருந்தாலும், ஏற்கனவே தீர்ப்பாயம் உத்தரவு பிறப்பித்தபடி தமிழக அரசின் தலைமைச் செயலாளரிடம் இருந்து அறிக்கை தாக்கல் செய்யப்படும் வரை கிண்டி ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் பசுமை பூங்கா அமைக்க எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படக்கூடாது. வழக்கு விசாரணை அடுத்த மாதம் 21-ந் தேதிக்கு தள்ளி வைக்கப்படுகிறது. இவ்வாறு அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

## அமெரிக்காவில் திடீர் கனமழை

**வாஷிங்டன், ஜூலை 17-**

அமெரிக்காவில் பெய்த கனமழைக்கு மெட்ரோ ரயில் நிலையத்தில் வெள்ள பெறுக்கு ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவின் வடகிழக்கு பகுதியில் கனமழை கொட்டி தீர்த்தது. இதனால் நியூயார்க் மற்றும் நியூஜெர்சி பகுதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. கனமழையால் பல நெடுஞ்சாலைகள் மற்று, சுரங்கப்பாதைகள் வெள்ளத்தில் மூழ்கின. மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு இருப்பதால் அங்கு அவசர சிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளம் பாதித்த பகுதிகளில் மக்கள் வீடுகளுக்குள்ளேயே இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தேவையற்ற பயணங்களை தவிர்க்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. கனமழை காரணமாக நியூயார்க் நகரில் மெட்ரோ ரெயில் நிலையத்திற்குள்ளும் வெள்ளம் புகுந்துள்ளது. வெள்ள நீர் புகுந்தத்தால், பயணிகள் இருக்கையில் ஏறி நின்ற காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன.

திருவண்ணாமலையில்

# மனிதர்களை தாக்கிய வினோத விலங்கு: தமிழக அரசு விளக்கம்

**திருவண்ணாமலை, ஜூலை 17-**

திருவண்ணாமலையில் மனிதர்களை தாக்கிய வினோத விலங்கு குறித்து தமிழக அரசு விளக்கமளித்துள்ளது.

திருவண்ணாமலை மாவட்டம் தண்டரம்பட்டு வட்டம் கீழ்வலசை என்ற கிராமத்தில் ஒரு வித்தியாசமான உயிரினம் உலவுவதாகவும், அது காட்டில் திடீரென்று ஒரு பெண்ணை தாக்கியதாகவும் குறிப்பிட்டு சில புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு வருகின்றன. திருவண்ணாமலையில் மனிதர்களை தாக்கிய வினோத விலங்கு என்று பரவி வரும் இந்த தகவல் அந்த பகுதியை சேர்ந்தவர்கள் இடையே பீதியை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து விளக்கம் அளித்து தமிழக அரசின் தகவல் சரிபார்ப்பகம் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:-

இது முற்றிலும் வதந்தி. நீளமான நகங்கள், 4 விரல்களை கொண்ட கால்கள் மற்றும் ஆட்டின் தலையுடைய மனித உருவிலான வித்தியாசமான உயிரினத்தின் புகைப்படம் கடந்த 2017-ம் ஆண்டு முதல் சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு வருகிறது. இதனை 'ஆடு மனிதன்' என்றும், வேற்றுக்கிரக வாசி என்றும் குறிப்பிட்டு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் வதந்தி பரப்பபப்பட்டது. இது 2011-ம் ஆண்டு கிராபிக்ஸ் போட்டிக்காக உருவாக்கப்பட்ட படமாகும். அதை பகிர்ந்து திருவண்ணாமலையில் நடந்த சம்பவம் என்று வதந்தி பரப்பி வருகிறார்கள். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தங்கம் விலை மேலும் சரிவு

**சென்னை, ஜூலை 17-**

சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.360 குறைந்து ஒரு சவரன் ரூ.72,800-க்கு விற்பனையானது.

இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்தே தங்கத்தின் விலை யாரும் எதிர்பார்க்காத வகையில் உயர்ந்தவாறு இருக்கிறது. பல்வேறு நாடுகளுக்கு இடையே திடீரென ஏற்படும் போர் பதற்றம் காரணமாகவும் தங்கம் விலை ஜெட் வேகத்தில் உயர்ந்து பின்னர் கணிசமாக குறைந்தது.


அந்த வகையில், கடந்த மாதம் 14-ந் தேதி வரலாறு காணாத வகையில் தங்கம் விலை உயர்ந்து ஒரு கிராம் ரூ.9,320-க்கும், ஒரு சவரன் ரூ.74,560-க்கும் விற்பனையானது. அதன் பின்னர் தங்கம் விலை தொடர்ந்து ஏற்ற, இறக்கத்துடன் காணப்பட்டு வருகிறது.

இந்த சூழலில் தங்கம் விலை நேற்று முன்தினம் சற்று குறைந்திருந்தது. இதன்படி சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.80 குறைந்து ஒரு சவரன் ரூ.73,160-க்கு விற்பனை செய்யப்பட்டது.

தங்கம் விலை கிராமுக்கு ரூ.10 குறைந்து ஒரு கிராம் ரூ.9,145-க்கு விற்பனை செய்யப்பட்டது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.2 குறைந்து, ஒரு கிராம் ரூ.125-க்கும், ஒரு கிலோ ரூ.1 லட்சத்து 25 ஆயிரத்திற்கும் விற்பனை செய்யப்பட்டது.

இந்நிலையில் தங்கம் விலை நேற்று மேலும் குறைந்து விற்பனையானது. இதன்படி சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.360 குறைந்து ஒரு சவரன் ரூ.72,800-க்கு விற்பனையானது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.45 குறைந்து ஒரு கிராம் ரூ.9,100-க்கு விற்பனையானது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.1 குறைந்து, ஒரு கிராம் ரூ.124-க்கும், ஒரு கிலோ ரூ.1 லட்சத்து 24 ஆயிரத்திற்கும் விற்பனையானது.

**17-07-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** குடும்பத்தாரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டு இருந்தால் சிக்கல் ஏற்படும். சுகமான நாள். தோல்விகளைக் கண்டு துவண்டு விடாதீர்கள். தோல்வியே வெற்றிக்கு முதல் படி ஆகும்.

**ரிஷபம்:-** நினைத்த காரியங்கள் எல்லாம் நிறைவேறும். காசு, பணம் சேரும். படுக்கை சுகங்கள், நல் ஆடைகள், நண்பர்கள் அருகாமை, நல்ல அதிர்ஷ்டம் என எல்லா நல்ல பலன்களாக நடக்கும்.

**மிதுனம்:-** பிறருக்கு உதவி புரிவதால் பேரின்பம் அடைவார்கள். படிப்பில் வெற்றிகள் படிப்படியாய் வரும். பிரிந்த தம்பதிகள் ஒன்று சேர்ந்து மகிழ்வர். பணவரவு மற்றும் பெண்களால் இலாபம் ஏற்பட, மனம் மகிழும்.

**கடகம்:-** உங்கள் செல்வாக்கு கூடும். தெய்வ நம்பிக்கையால், கோவில் திருப்பணிகள் மற்றும் அன்னதானங்கள் செய்ய மனம் விழையும். வாழ்க்கையின் வசந்த காலம். நல்ல திருப்பங்கள் ஏற்படும்.

**சிம்மம்:-** கட்டுக்கடங்காத செலவுகள் ஏற்படும். வாகனங்களில் செல்கையில் வேகத்தை குறைத்து, விபத்தினைத் தவிர்க்கவும். உறவுகளிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளை தவிர்க்க முயலவும்.

**கன்னி:-** புதிய உத்தியோகமும், உத்வேகமும் ஏற்படும். பணியில் பணிவும், துணிவும் இருந்தால் முன்னேற்றம் ஏற்படும். பெண்களால் இலாபமும், போகமும் உண்டு. விருந்தோம்பலால் மனம் மகிழும்.

**துலாம்:-** சாதுர்யப் பேச்சால் அனைவரையும் கவர்வீர்கள். பல வழிகளில் பணவரவு உண்டாகிப் பெரிய மனிதர் எனப் பெயர் எடுப்பீர்கள். அரசாங்கத்தால் ஆதாயங்கள் ஏற்படும்.

**விருச்சிகம்:-** உங்கள் திறமைகள் அனைத்தையும் காட்டி செயல்பட்டாலும் அவமானமே மிஞ்சும். அக்கம் பக்கத்தினருடன் அனுசரணையாக நடப்பது நல்லது. வாகனங்களில் நிதானமாகச் சென்றால், விபத்துகளை தவிர்க்கலாம்.

**தனுசு:-** தாயின் ஆரோக்கியத்தில் அலட்சியம் காட்டாதீர்கள். சிறு உபாதையானாலும் மருத்துவரை அணுகுங்கள். பயணங்களில் வசதிகள் குறையும். வீட்டில் உள்ள விலை உயர்ந்த பொருட்களை பாதுகாப்பாக வைக்கவும்.

**மகரம்:-** உங்கள் திறமைகள் அதிகரிப்பதன் காரணமாக தன லாபம் பெருகும். புதிய நண்பர்கள் சேர்க்கையும் அவர்களால் உதவியும் கிடைக்கும். தன்னம்பிக்கை கூடும். மனத்தெம்பும் மனமகிழ்ச்சியும் அதிகரிக்கும்.

**கும்பம்:-** பணக் கஷ்டங்கள் அதிகமாக, மனக் கஷ்டங்கள் அதிகரிக்கும். எந்தவொரு மூலதனத் திட்டங்களிலும், தீர விசாரித்து முதலீடு செய்தால் இழப்பைத் தவிர்க்கலாம்.

**மீனம்:-** புதிய உற்சாகம் பிறக்கும் பொன்னான நாள். குழந்தைகள் பால் அன்பும், அவர்களின் முன்னேற்றத்தில் ஆர்வமும் ஏற்படும். மனைவியின் பணிவிடைகள் மகிழ்ச்சி அளிக்கும்.



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் மயிலாடுதுறையில் நடைபெற்ற அரசு விழாவில், 271 கோடியே 24 லட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை 54,461 பயனாளிகளுக்கு வழங்கிய நிகழ்வில், மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கினார்.

# ஈரான் பயணத்தை தவிர்க்குமாறு இந்திய தூதரகம் அறிவுறுத்தல்

**தெஹ்ரான், ஜூலை 17-**

அத்தியாவசியமற்ற ஈரான் பயணத்தை தவிர்க்குமாறு அந்நாட்டில் உள்ள இந்திய தூதரகம் இந்தியர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

ஈரானில் உள்ள இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:- ஈரானுக்கு அத்தியாவசிய மற்ற பயணங்களை மேற்கொள்வதற்கு முன், கடந்த பல வாரங்களாக ஈரானில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு தொடர்பான அம்சங்களைக் கருத்தில் கொள்ளுமாறும், சூழ்நிலையை கவனமாக பரிசீலிக்குமாறும் இந்தியர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். ஈரானில் என்ன நடக்கிறது என்பதை தொடர்ந்து கண்காணிப்பதோடு, இந்திய அதிகாரிகள் வழங்கிய சமீபத்திய ஆலோசனைகளை பின்பற்றுமாறும் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

ஏற்கனவே ஈரானில் உள்ள இந்தியர்கள், இங்கிருந்து வெளியேற விரும்பினால் தற்போது கிடைக்கும் வணிக விமான சேவை மற்றும் கப்பல் சேவைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்." என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஈரான் அணு ஆயுதங்களை தயாரிக்க முயல்வதாகவும், இது தங்கள் நாட்டின் எதிர்கால பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என்றும் கூறி அந்நாட்டுக்கு எதிராக இஸ்ரேல் கடந்த மாதம் வான் தாக்குதல்களை நடத்தியது. இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்காவும் ஈரானின் அணு ஆயுத தயாரிப்புக்கான மூன்று மையங்கள் மீது குண்டுகளை வீசி தாக்குதல்களை நடத்தியது.

பதில் நடவடிக்கையாக கத்தாரில் உள்ள அமெரிக்க ராணுவ விமான தளத்தின் மீது ஈரான் வான் தாக்குதல்களை நடத்தியது. இதனால், அங்கு பதற்றம் அதிகரித்தது. இதன் காரணமாக, ஈரானில் இருந்த இந்தியர்களில் பலர் மத்திய அரசு அனுப்பிய விமானங்கள் மூலம் பத்திரமாக நாடு திரும்பினர். எனினும், இன்னமும் பலர் அங்கேயே உள்ளதாகக் கூறப்படுகிறது. ஈரானுக்கு எதிரான இஸ்ரேலின் தாக்குதல் 12 நாட்கள் நீடித்த நிலையில், அமெரிக்காவின் போர் நிறுத்த அறிவிப்பை அடுத்து அங்கு அமைதி திரும்பியது. இந்த பின்னணியில், ஈரானில் உள்ள இந்திய தூதரகம் இந்த அறிவுறுத்தலை வழங்கி உள்ளது.

# ஜூலை 23-ல் நாடு திரும்புகிறது பிரிட்டீஷ் நாட்டு போர் விமானம்

**திருவனந்தபுரம், ஜூலை 17-**

தொழில்நுட்பக்கோளாறு காரணமாக திருவனந்தபுரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பிரிட்டீஷ் போர் விமானம் ஜூலை 23ல் திரும்பிச் செல்லும் என பிரிட்டீஷ் உயர் அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

பிரிட்டீஷ் கடற்படையின் எப் 35 பி போர் விமானம் ஜூன் 14ம் தேதி திருவனந்தபுரம் விமான நிலையத்தில் அவசரமாக தரை இறங்கியது. எரிபொருள் பிரச்னையால் தரை இறங்கிய விமானம் பழுதாகி நின்றுவிட்டது. இதனை மீண்டும் பறக்க வைக்க தொழில்நுட்ப நிபுணர்கள் நீண்ட நேரம் போராடியும் முயற்சி கை கொடுக்கவில்லை. அமெரிக்கா, பிரிட்டன், இத்தாலி நாட்டு ராணுவத்தினர் மட்டுமே வைத்திருக்கும் இந்த அதிநவீன போர் விமானம், உலகில் மிகுந்த விலை மதிப்பு கொண்டதாக கருதப்படுகிறது.

பழுதான நிலையில், திருவனந்தபுரம் விமான நிலையத்தில் நிற்கும் விமானம், கேலி, கிண்டலுக்கு ஆளானது. போர் விமானத்தின் படத்தை மீம்ஸ் வெளியிட்டு நெட்டிசன்கள் தாறுமாறாக விமர்சித்தனர். விமானத்தின் பழுது சரி செய்வதற்காக, பிரிட்டீஷ் விமானப்படை பொறியாளர்கள் 24 பேர் கொண்ட குழு, திருவனந்தபுரம் வந்துள்ளது. அவர்கள் ஒரு வாரம் போராடி, விமானத்தை பழுது நீக்கும் பணியை மேற்கொண்டு வருகின்றனர். முக்கிய கோளாறுகள் சரி செய்யப்பட்டு விட்டன. போர் விமானம் ஜூலை 23ம் தேதி தாய் நாட்டுக்கு கொண்டு செல்லப்படும் என பிரிட்டீஷ் உயர் அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

மாரத்தான் வீரர் பவுஜா சிங் விபத்தில் மரணம்:

# வெளிநாடு வாழ் இந்தியர் கைது

**பஞ்சாப, ஜூலை 17-**

பஞ்சாபைச் சேர்ந்த 114 வயது மாரத்தான் ஓட்டப்பந்தய வீரர் பவுஜா சிங். பியாஸ் கிராமத்தில் நடைபயிற்சியில் ஈடுபட்டு இருந்த போது அடையாளம் தெரியாத வாகனம் மோதியதில் பலியானார். பவுஜா சிங் உயிரிழந்தது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய நிலையில் அவரின் மறைவுக்கு பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள், விளையாட்டு வீரர்கள் இரங்கல் வெளியிட்டு இருந்தனர். இந் நிலையில், பவுஜா சிங் மீது கார் ஏற்றிக் கொன்ற சம்பவத்தில் அம்ரித்பால் சிங் தில்லான் என்பவரை போலீசார் கைது செய்துள்ளனர்.

இவர் வெளிநாடு வாழ் இந்தியர் ஆவார். அவரது சொந்த ஊரான கர்தார்பூரில் வைத்து போலீசாரால் கைது செய்யப்பட்டார். இவர் அண்மையில் தான் கனடாவில் இருந்து சொந்த ஊர் திரும்பி இருந்தார். சிசிடிவி கேமராவில் இருந்த காட்சிகளை கொண்டு விசாரணை நடத்திய போது விபத்தை ஏற்படுத்திய காரையும், அதன் பதிவு எண்ணையும் அடையாளம் கண்டனர். கபூர்தலாவைச் சேர்ந்த வரிந்தர் சிங் என்பவரின் கார் என்பதை கண்டுபிடித்த போலீசார், அவரின் கிராமத்துக்கே சென்று அவரிடம் விசாரணை நடத்தினர்.

2 ஆண்டுகளுக்கு முன்பாக அவர் கர்தார்பூரைச் சேர்ந்த அமிர்தபால் சிங் தில்லான் என்பவரிடம் காரை விற்றுவிட்ட தகவலை தெரிவித்துள்ளார். கார் வாங்கி இருந்தாலும் அதன் ஆவணங்களை தம் பெயருக்கு மாற்றாமல்,வரிந்தர் சிங் பெயரிலேயே அமிர்தபால் சிங் தில்லான் பயன்படுத்தி இருக்கிறார். விபத்து நிகழ்ந்த நேரத்தில் அவர் தான் சொகுசு காரை ஓட்டிச் சென்று பவுஜா சிங் மீது மோதியது விசாரணையில் தெரிய வந்துள்ளது. அவரை கைது செய்துள்ள போலீசார், மருத்துவ பரிசோதனைக்கு அழைத்துச் சென்றனர்.

# கும்பகோணம் பள்ளி தீ விபத்து: 21-ம் ஆண்டு நினைவு தினத்தில் பெற்றோர்கள் மவுன அஞ்சலி

**சுவாமிமலை, ஜூலை 17-**

கும்பகோணம் பள்ளி தீ விபத்தில் பெற்றோர்கள் மவுன அஞ்சலி செலுத்தினர்.

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் காசிராமன் தெருவில் அமைந்திருந்த ஸ்ரீ கிருஷ்ணா உதவிபெறும் தொடக்கப்பள்ளியில் கடந்த 2004-ம் ஆண்டு ஜூலை மாதம் 16-ந்தேதி ஏற்பட்ட தீ விபத்தில் 94 குழந்தைகள் தீயில் கருகி உயிரிழந்தனர். மேலும், 18 குழந்தைகள் படுகாயம் அடைந்தனர்.

இந்த சம்பவத்தால் தமிழகமே மிகுந்த சோகத்தில் மூழ்கியது.

இந்த நிலையில், உயிரிழந்த குழந்தைகளின் நினைவாக ஆண்டுதோறும் நினைவு நாள் அனுசரிக்கப்பட்டு வருகிறது. அதன்படி, 21-ம் ஆண்டு நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது.

முன்னதாக தீ விபத்தில் உயிரிழந்த 94 குழந்தைகளின் படங்கள் அடங்கிய பேனர் பள்ளியின் முன்பு வைக்கப்பட்டு இருந்தது. இந்த பேனருக்கு பெற்றோர்கள், உறவினர்கள், அரசியல் கட்சியினர், பொதுமக்கள் உள்ளிட்டோர் மலர் தூவி, மலர் வளையம் வைத்து மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்தினர். பின்னர், அக்குழந்தைகளின் நினைவிடங்களில் மவுன அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடந்தது. தொடர்ந்து, மாலை தீ விபத்து ஏற்பட்ட பள்ளியில் இருந்து தீபம் ஏந்தியவாறு, மவுன ஊர்வலம் புறப்பட்டு, மகாமக குளத்திற்கு சென்று மோட்ச தீபம் ஏற்றப்பட உள்ளது.



மயிலாடுதுறையில் நேற்று நடைபெற்ற அரசு விழாவில் பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டார்.

# குழந்தைகளின் ஆதாரை புதுப்பிக்க அறிவுறுத்தல்

**சென்னை, ஜூலை 17-**

குழந்தைகளின் ஆதாரை புதுப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

5 வயதுக்கும் கீழ் உள்ள குழந்தைகளுக்கு பெயர், பிறந்த தேதி, பாலினம், முகவரி ஆகியவற்றை வைத்து ஆதார் எண் வழங்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து, 5 வயதை தாண்டும் போது ஆதாருடன் கருவிழி, கைரேகை பதிவுகளை இணைக்க இந்திய தனித்துவ அடையாள ஆணையம் அறிவுறுத்தி உள்ளது. 5 முதல் 7 வயதுடைய குழந்தைகளை அருகில் உள்ள சேவை மையங்கள், தபால் நிலையங்கள், அரசால் அங்கீகரிக்கபப்ட்ட ஆதார் மையங்களுக்கு அழைத்துச் சென்று இலவசமாக இணைத்துக் கொள்ளலாம் என்றும், 7 வயதைத் தாண்டிய குழந்தைகளுக்கு 100 ரூபாய் கட்டணம் செலுத்தி புதுப்பித்துக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 7 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு ஆதார் எண்ணுடன் கைரேகை, கருவிழி இணைக்காவிட்டால் ஆதார் அட்டை செயலிழக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் புதுப்பிப்பு தொடர்பாக குழந்தைகளின் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ள மொபைல் எண்களுக்கு குறுஞ்செய்தி அனுப்பப்பட்டு வருவதாகவும் இந்திய தனித்துவ அடையாள ஆணையம் தெரிவித்துள்ளது.

# இன்று போர்களை எதிர்கொள்ள நவீன தொழில்நுட்பம் தேவை

## முப்படை தலைமை தளபதி பேச்சு

**புதுடில்லி, ஜூலை 17-**

'இன்றைய போர்களை எதிர்த்துப் போராட நாளைய தொழில்நுட்பம் தேவை' என முப்படை தலைமை தளபதி அனில் சவுகான் தெரிவித்துள்ளார்.

டில்லியில், நடந்த பாதுகாப்பு தொடர்பான நிகழ்ச்சியில், அனில் சவுகான் பேசியதாவது: நேற்றைய ஆயுதங்களால் இன்றைய போர்களை வெல்ல முடியாது. இன்றைய போர்களை எதிர்த்துப் போராட நாளைய தொழில்நுட்பம் தேவை. காலாவதியான ஆயுதங்களைக் கொண்டு இந்தியா நவீன போர்களை எதிர்கொள்ள முடியாது.மே 10ம் தேதி, ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை தொடங்கியபோது, பாகிஸ்தான் ட்ரோன்கள் மற்றும் வெடிமருந்துகளைப் பயன்படுத்தியது. அவற்றில் எதுவும் இந்திய ராணுவத்திற்கோ அல்லது சிவில் உள்கட்டமைப்பிற்கோ எந்த சேதத்தையும் ஏற்படுத்தவில்லை. ட்ரோன் தொழில்நுட்பங்களை உருவாக்குவது மிகவும் அவசியம். நாம் ட்ரோன்களைப் பற்றிப் பேசும்போது, இவை என்ன என்று நீங்கள் நினைக்கிறீர்கள்.போரில் புரட்சிகரமான மாற்றத்தைக் கொண்டு வருகிறதா? என்று கேள்வி கேட்கிறீர்கள். அவற்றின் செயல்பாடுகள் மிகவும் புரட்சிகரமானது என்றும் நான் நினைக்கிறேன். பரிணாம மாற்றங்கள், போர் சண்டை உபகரணங்களை சிறியதாகவும், வேகமாகவும், இலகுவாகவும், திறமையாகவும், மலிவு விலையிலும் ஆக்கியுள்ளன. இவ்வாறு அனில் சவுகான் பேசினார்.

# பெங்களூரு சாலைக்கு மறைந்த நடிகை சரோஜாதேவி பெயர்

## கர்நாடக முதல்வர் அறிவிப்பு

**பெங்களூரு, ஜூலை 17-**

பெங்களூரு சாலைக்கு நடிகை சரோஜாதேவி பெயர் சூட்டப்படும் என்று முதல்வர் சித்தராமையா தெரிவித்துள்ளார்.

கர்நாடக முதல்வர் சித்தராமையா நிருபர்களுக்கு பேட்டி அளிக்கையில் கூறியதாவது:- பன்மொழி நடிகை சரோஜாதேவியின் மறைவு திரைத்துறைக்கு அதிர்ச்சியை கொடுத்துள்ளது. சிறு வயதிலேயே திரைத்துறையில் நுழைந்து 70 ஆண்டுகள் சினிமாக்களில் நடித்துள்ளார். அவரை கன்னடத்தின் அபிநய சரஸ்வதி என்று அழைத்தனர். பிரபல நடிகர்களான எம்.ஜி.ஆர்., என்.டி.ஆர்., சிவாஜி கணேசன், ராஜ்குமார், திலீப்குமார், தேவ் ஆனந்த், ராஜேந்திர குமார் உள்ளிட்டோருடன் நடித்து புகழ்பெற்றார். அவர் ஏற்று நடித்த எல்லா கதாபாத்திரத்திலும் உயிர்கொடுத்தார். தனது தனிப்பட்ட வாழ்க்கையிலும் சரியான முறையில் வாழ்ந்தார்.

நான் பலமுறை அவரை சந்தித்து பேசியுள்ளேன். அவர் அனைவருடனும் அன்பாக பழகினார். அவருக்கு பெரிய பண்பு இருந்தது. அவர் நடித்த கித்தூர் ராணி சென்னம்மா, பாக்யவந்தரு, மல்லம்மன பவாட, நியாயவே தேவரு உள்ளிட்ட படங்களை நான் பார்த்துள்ளேன். அவரது வீடு அமைந்துள்ள மல்லேசுவரம் 11-வது கிராஸ் சாலைக்கு சரோஜாதேவியின் பெயர் சூட்டுவது குறித்து மாநகராட்சி அதிகாரிகளுடன் ஆலோசித்து முடிவு எடுக்கப்படும்.இவ்வாறு அவர் கூறினார்.

# கூட்டணியைப் பொருத்தவரை நான் சொல்வதே இறுதியானது

## எடப்பாடி பழனிசாமி விளக்கம்

**சிதம்பரம், ஜூலை 17-**

தமிழகத்தில் கூட்டணி ஆட்சி என்று அமித்ஷா சொல்லவில்லை. எங்கள் கூட்டணியே ஆட்சி அமைக்கும் என்றுதான் சொன்னார். எங்கள் கூட்டணியைப் பொருத்தவரை நான் சொல்வதே இறுதியானது." என அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

கூட்டணி ஆட்சி என்று அமித்ஷா சொல்லவில்லை: எங்கள் கூட்டணியே ஆட்சி



அமைக்கும் என்றுதான் என்றார். அமித்ஷா சொல்கிறார். அமித்ஷா சொல்வதை திரிக்க கூடாது.

எங்கள்கூட்டணியில் பாஜக உள்ளது. இன்னும் சில கட்சிகள் உள்ளன. பாஜகவுடன் கூட்டணி வைத்ததால் ஸ்டாலினுக்கு பயம் வந்து விட்டது.

ஆட்சியில் பங்கு வேண்டும் என பாமக கூறியதாக கேட்கிறீர்கள். பாமக கூட்டணிக்கு வந்தால் பார்க்கலாம் என்றார்.

# முன்ஜாமீன் கோரி மதுரை ஆதீனம் மனு: தீர்ப்பை தள்ளிவைத்து கோர்ட் உத்தரவு

**சென்னை, ஜூலை 17-**

முன்ஜாமீன் கோரி மதுரை ஆதீனம் தாக்கல் செய்த வழக்கில் தீர்ப்பினை சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் தள்ளி வைத்துள்ளது.



கடந்த மே 2-ம் தேதி சைவ சிந்தாந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக மதுரை ஆதீனம் காரில் வந்து கொண்டிருந்தபோது உளுந்தூர்பேட்டை - சேலம் ரவுண்டானா பகுதியில் மதுரை ஆதீனத்தின் கார் மீது மற்றொரு கார் மோதி விட்டு நிற்காமல் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மாநாட்டில் பேசிய மதுரை ஆதீனம், தன்னை கொலை செய்ய சதி நடந்துள்ளது என்றும், இதில் பாகிஸ்தானுக்கு தொடர்பு இருக்கலாம் எனவும், தன் கார் மீது மோதிய காரில் வந்தவர்கள் குல்லா அணிந்தனர், தாடி வைத்திருந்தனர் எனவும் கூறியிருந்தார். இது சமூக வலைதளங்களில் வைரலாகப் பரவியது.

இந்நிலையில் இவரது பேச்சு இரு மதத்தினருக்கு இடையே குழப்பத்தையும், மோதலையும் உருவாக்கும் வகையில் இருப்பதாக கூறி சென்னையைச் சேர்ந்த வழக்கறிஞர் ராஜேந்திரன் சைபர் கிரைம் காவல்துறையில் அளித்த புகாரின் அடிப்படையில், ஆதீனத்துக்கு எதிராக நான்கு பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கில் முன் ஜாமீன் கோரி மதுரை ஆதீனம் தரப்பில் சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனு சென்னை முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி கார்த்திகேயன் முன்பு விசாரணைக்கு வந்தபோது, உள் நோக்கத்துடன் புகார் அளிக்கப்பட்டுள்ளதால் தனக்கு முன் ஜாமீன் வழங்க வேண்டும் என மனுதாரர் தரப்பில் தெரிவிக்கபட்டது.

காவல்துறை தரப்பில், கருத்து சுதந்திரத்தை தவறாக பயன்படுத்தி இருப்பதால் மதுரை ஆதீனத்திற்கு முன் ஜாமீன் வழங்கக் கூடாது, அவரின் முன்ஜாமீன் கோரிய மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து நீதிபதி, முன்ஜாமீன் கோரிய மதுரை ஆதீனத்தின் மனுவின் மீதான தீர்ப்பினை தள்ளிவைத்து உத்தரவிட்டார்.

## எம்.பியாக ஜூலை 25-ல் பதவியேற்பு:

# நடிகர் ரஜினியை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார் கமல்ஹாசன்



**சென்னை, ஜூலை 17-**

மாநிலங்களவை எம்.பியாக வரும் 25-ம் தேதி பதவியேற்கவுள்ள நிலையில், மாநிலங்களவை உறுப்பினராக தேர்வு செய்யப்பட்ட சான்றிதழை சக நடிகரும், தனது நண்பருமான ரஜினிகாந்திடம் நேரில் காட்டி ம.நீ.ம. தலைவர் கமல்ஹாசன் வாழ்த்து பெற்றார். தமிழ்நாட்டில் இருந்து மாநிலங்களவைக்குத் தேர்வான வைகோ, பி.வில்சன், சண்முகம், எம்.எம்.அப்துல்லா, அன்புமணி மற்றும் சந்திரசேகரன் ஆகியோரது பதவிக்காலம் ஜூலை 24-ம் தேதியுடன் நிறைவடைகிறது. இதையடுத்து, 6 இடங்களுக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டது.

திமுக சார்பில் பி.வில்சன், கவிஞர் சல்மா, சிவலிங்கம், மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் ஆகியோரும், அதிமுக சார்பில் தனபால், ஐ.எஸ்.இன்பதுரை ஆகியோரும் வேட்புமனு தாக்கல் செய்தனர். இவர்கள் அனைவருமே போட்டியின்றி தேர்வாகினர். இதற்கான அதிகாரபூர்வ அறிவிப்பை தேர்தல் நடத்தும் அதிகாரியான சுப்பிரமணியம் வெளியிட்டு இருந்தார். இதுதொடர்பான அறிக்கையில், "மாநிலங்களவைக்கு தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு உறுப்பினர்களின் பதவிக்காலம் 24.07.2025-ஆம் நாளன்று முடிவடைவதால் ஏற்படும் காலியிடங்களுக்கு திமுக சார்பில் பி.வில்சன், கவிஞர் சல்மா, சிவலிங்கம், மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் ஆகியோரும், அதிமுக சார்பில் தனபால், ஐ.எஸ்.இன்பதுரை ஆகியோரும் மாநிலங்களவை உறுப்பினர்களாக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்" என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த சூழலில் கமல்ஹாசன் மற்றும் திமுகவை சேர்ந்த 3 பேரும் மாநிலங்களவை எம்.பியாக வரும் 25-ம் தேதி பதவியேற்க இருக்கிறார்கள். இந்நிலையில் மாநிலங்களவை உறுப்பினராக தேர்வு செய்யப்பட்ட சான்றிதழை சக நடிகரும், தனது நண்பருமான ரஜினிகாந்திடம் நேரில் காட்டி, மகிழ்ச்சியை ம.நீ.ம. தலைவர் கமல்ஹாசன் பகிர்ந்துள்ளார்.

# அமெரிக்காவில் சிகிச்சை முடிந்து கேரளா திரும்பினார் முதல்வர் பினராயி

**திருவனந்தபுரம், ஜூலை 17-**

அமெரிக்காவில் சிகிச்சை முடிந்து கேரளா முதல்வர்பினராய் விஜயன் திரும்பினார்.

கேரள முதல்வர் பினராயி விஜயன் உயர் சிகிச்சைக்காக கடந்த 5-ந்தேதி அமெரிக்கா புறப்பட்டு சென்றார். அங்குள்ள மினாசோட்டோ மயோ கிளினிக்கில் அவருக்கு உயர் மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது. 10 நாட்கள் நடந்த சிகிச்சைக்கு பின் முதல்வர் பினராயி விஜயன் தனது மனைவியுடன் நேற்று அதிகாலை 3.30 மணிக்கு கேரளா திரும்பினார். திருவனந்தபுரம் விமான நிலையத்தில் பினராயி விஜயனை, தலைமை செயலாளர் ஜெயதிலக், டி.ஜி.பி. ரவாடா சந்திரசேகர் மற்றும் உயர் அதிகாரிகள் வரவேற்றனர். முதல்வர் பினராயி விஜயன் சிகிச்சைக்காக அமெரிக்காவுக்கு சென்றது இது 4-வது முறையாகும்.

## கழிவறை பற்றாக்குறை விவகாரம்;

# ஐகோர்ட்களுக்கு சுப்ரீம் கோர்ட் எச்சரிக்கை

**புதுடெல்லி, ஜூலை 17-**

கழிவறை பற்றாக்குறை விவகாரத்தில் அடுத்த 8 வாரங்களில் அறிக்கைகளை சமர்ப்பிக்கவில்லை என்றால் அதற்கான எதிர்விளைவுகளை சந்திக்க நேரிடும் என சுப்ரீம் கோர்ட் கடுமையாக எச்சரித்துள்ளது.

நாட்டில் பொதுமக்களுக்கு சட்ட ரீதியாக நீதி கிடைக்க வழிவகை செய்யும் கோர்ட்களுக்கு நாள்தோறும் நீதிபதிகள், வழக்கறிஞர்கள், வழக்கு தொடுத்தவர்கள் மற்றும் கோர்ட் ஊழியர்கள் என பலர் வந்து செல்வார்கள். ஆனால், அவர்களுக்கு போதிய கழிவறை வசதிகள் இல்லாததுபற்றி வழக்கறிஞரான ரஜீப் கலிதா, சுப்ரீம் கோர்ட்டில் பொதுநல வழக்கு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

இதுபற்றி கடந்த ஜனவரி 15-ந்தேதி சுப்ரீம் கோர்ட் விசாரணை மேற்கொண்டது. அப்போது, முறையான தூய்மை என்பது அரசியல் சாசனத்தின் பிரிவு 21-ன் கீழ் அடிப்படை உரிமையாக அங்கீகரிக்கப்பட்டு உள்ளது என தெரிவித்தது.

அதன் தீர்ப்பில், ஆண்கள், பெண்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் மாற்று பாலினத்தவர்கள் ஆகியோருக்கு தனித்தனியாக அனைத்து கோர்ட் வளாகங்களிலும் மற்றும் தீர்ப்பாயங்களிலும் கழிவறை வசதிகள் உள்ளன என உறுதி செய்யப்பட வேண்டும் என தெரிவித்தது. ஐகோர்ட்கள், மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் இதனை உறுதி செய்யும்படி உத்தரவுகளை பிறப்பித்தது.

நீதிபதி ஒருவரின் தலைமையின் கீழ் ஐகோர்ட்கள் ஒவ்வொன்றிலும் ஒரு கமிட்டியை அமைக்கவும் உத்தரவிட்டது. இதேபோன்று சராசரியாக நாள் ஒன்றுக்கு கோர்ட்களுக்கு எத்தனை பேர் வருகின்றனர் என எண்ணிக்கையை கவனித்தும், போதிய தனி கழிவறைகள் கட்டப்பட்டு, பராமரிக்கப்படுகின்றன என உறுதி செய்து, அதற்கான நிதியொதுக்குவது உள்ளிட்ட பணிகளுக்காக ஒரு விரிவான திட்டம் வகுக்கும்படியும் கமிட்டிக்கு உத்தரவிட்டது.

4 மாதங்களில் அதுபற்றிய ஒப்புதல் அறிக்கையை சமர்ப்பிக்கும்படியும் கேட்டுகொண்டது. இந்நிலையில், ஜார்கண்ட், மத்திய பிரதேசம், கல்கத்தா, டெல்லி மற்றும் பாட்னா ஐகோர்ட்களே, இதுபற்றி எடுத்த நடவடிக்கைகள் பற்றிய விவரங்களை கோர்ட்டில் சமர்ப்பித்து உள்ளன. நாட்டில் மொத்தம் 25 ஐகோர்ட்கள் உள்ளன. மீதமுள்ள 20 ஐகோர்ட்கள் உத்தரவுக்கேற்ப நடந்து கொள்ளவில்லை.

இதுபற்றி சுப்ரீம் கோர்ட்டின் நீதிபதிகள் ஜே.பி. பர்திவாலா மற்றும் ஆர். மகாதேவன் அடங்கிய அமர்வு நேற்று மீண்டும் விசாரித்த போது, இதற்காக வேதனை தெரிவித்தனர். இந்தியாவின் அனைத்து கோர்ட் வளாகங்களிலும் மற்றும் தீர்ப்பாயங்களிலும் கழிவறை வசதிகள் உள்ளன என உறுதி செய்யப்பட வேண்டும் என கூறி அது பற்றிய ஒப்புதல் அறிக்கையை சமர்ப்பிக்க 8 வார கால அவகாசமும் அளித்துள்ளது.

அப்படி, அடுத்த 8 வாரங்களில் அறிக்கைகளை சமர்ப்பிக்கவில்லை என்றால் அதற்கான எதிர்விளைவுகளை சந்திக்க நேரிடும் என கடுமையாக குறிப்பிட்டது.

## ஆகஸ்ட் 25-ல் மதுரையில் நடைபெறுகிறது:

# த.வெ.க.வின் 2-வது மாநில மாநாடு: விஜய் அறிவிப்பு

**சென்னை, ஜூலை 17-**

தமிழக வெற்றிக் கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு, வருகிற ஆகஸ்ட் மாதம் 25ஆம் தேதி (25.08.2025) திங்கட்கிழமை அன்று மதுரையில் நடைபெற உள்ளது என அக்கட்சியின் தலைவர் விஜய் அறிவித்துள்ளார்.



அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தனது தேர்தல் பிரச்சாரப் பயணத்தைத் தொடங்கிவிட்டார். 'தமிழகத்தைக் காப்போம்' மக்களை மீட்போம்' என்ற பெயரில் அவரது பிரச்சாரம் சூடு பிடிதுள்ளது. அதேபோல் ஆளும் திமுகவும் 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற பிரச்சாரத்தை முன்னெடுத்துள்ளது. இந்நிலையில் தவெக மாநாடு மதுரையில் நடைபெறவிருப்பது மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் தமிழக வெற்றிக் கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு, வருகிற ஆகஸ்ட் மாதம் 25ஆம் தேதி (25.08.2025) திங்கட்கிழமை அன்று மதுரையில் நடைபெற உள்ளது என அக்கட்சியின் தலைவர் விஜய் அறிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில்,

"என் நெஞ்சில் குடியிருக்கும் தமிழக மக்களுக்கும், கழகத் தோழர்களுக்கும் வணக்கம்.

தமிழக அரசியல் களத்தின் முதன்மை சக்தியான தமிழக வெற்றிக் கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு, வருகிற ஆகஸ்ட் மாதம் 25ஆம் தேதி (25.08.2025) திங்கட்கிழமை அன்று மதுரையில் நடைபெற உள்ளது என்பதை அறிவிப்பதில் மகிழ்கிறேன். வாகை சூடும் வரலாறு திரும்பட்டும். வெற்றி நிச்சயம். நன்றி." என்று பதிவிட்டுள்ளார்.'மாஸ்' காட்டிய விஜய்! தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநில மாநாடு விழுப்புரம் - விக்கிரவாண்டி அருகே உள்ள வி.சாலையில் கடந்த அக்டோபர் 27-ம் தேதி நடைபெற்றது. அந்த மாநாட்டில் விஜய் மிக நீண்ட உரையாற்றினார். "திராவிடமும், தமிழ் தேசியமும் எங்களது இரு கண்கள். எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்பது தான் நமது குறிக்கோள். பிளவுவாத சக்திகளும், ஊழல் மலிந்த அரசியலும் தான் நம் எதிரி." என்று விஜய் தனது உரையில் குறிப்பிட்டார். அந்த மாநாட்டில் திமுகவை அப்பட்டமாக விமர்சித்தார். மத்திய அரசையும் ஓரளவுக்கு விமர்சனம் செய்தார்.

பிரம்மாண்டம், வசீகரப் பேச்சு, ஆர்ப்பரித்தக் கூட்டம் என விஜய்யின் முதல் மாநாடு மிக்கப்பெரிய கவனம் பெற்றது. அந்த மாநாடு அவரது அரசியல் வாழ்க்கைக்கு ஒரு முக்கிய நகர்வாக இருந்தது. அதனைத் தொடர்ந்து கிட்டத்தட்ட 10 மாதங்களுக்குப் பின்னர் ஆகஸ்ட் 25-ல் மதுரையில் 2-வது மாநில மாநாடு நடைபெறும் என்று விஜய் அறிவித்துள்ளார். அண்மையில் சென்னை பனையூரில் த வெ க முதல் பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. அதில் விஜய் தனது கூட்டணி நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியிருந்தார். அதன் மீது இன்னும் சற்று உறுதியான நிலைப்பாடு மதுரை மாநாட்டில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## மாணவர்களுக்கான சிறந்த நகரங்கள் பட்டியல்:

# 4 இந்திய நகரங்களுக்கு இடம்

**புதுடெல்லி, ஜூலை 17-**

இந்தியாவில் மாணவர்களுக்கான சிறந்த நகரங்கள் தரவரிசையில் 4 நகரங்கள் இடம் பெற்றது.

லண்டனை சேர்ந்த சர்வதேச உயர் கல்வி ஆலோசனை நிறுவனமான 'கியூ.எஸ்.' மாணவர்களுக்கான உயர் கல்விக்கு சிறந்த நகரங்கள் தரவரிசை பட்டியலை ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது. இந்த ஆண்டுக்கான பட்டியலில், 2½ லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள்தொகையுடனும், உலக தரவரிசை பட்டியலில் குறைந்தபட்சம் 2 பல்கலைக்கழகங்களுடனும் உள்ள 150 நகரங்கள் மதிப்பீட்டுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. சுமார் 1 லட்சம்பேரிடம் கருத்துகள் கேட்கப்பட்டன. அதில், முதல் 130 இடங்களுக்குள் டெல்லி, மும்பை, பெங்களூரு, சென்னை ஆகிய 4 இந்திய நகரங்கள் இடம்பெற்றுள்ளன. 4 நகரங்களும் முந்தைய ஆண்டை விட பல இடங்கள் முன்னேறி உள்ளன. மும்பை, 15 இடங்கள் முன்னேறி 98-வது இடத்தை பிடித்துள்ளது.

டெல்லி, 7 இடங்கள் முன்னேறி 104-வது இடத்தை பிடித்துள்ளது.

பெங்களூரு 22 இடங்கள் முன்னேறி 108-வது இடத்தை பிடித்துள்ளது. சென்னை, 12 இடங்கள் முன்னேறி, 128-வது இடத்தை பிடித்துள்ளது.

தொடர்ந்து 6 ஆண்டுகளாக முதல் இடத்தில் இருந்த லண்டன், 3-வது இடத்துக்கு தள்ளப்பட்டது.

தென்கொரிய தலைநகர் சியோல், முதல் இடத்தை பிடித்துள்ளது.

# ஜார்க்கண்ட்டில் 2 மாவோயிஸ்டுகள் சுட்டுக்கொலை

**ராஞ்சி, ஜூலை 17-**

ஜார்க்கண்ட் மாநிலயத்தில் 2 மாவோயிஸ்டுகள் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர். இதில் பாதுகாப்புப் படை வீரர் மரணம் அடைந்தார். சத்தீஷ்கார், மராட்டியம், ஜார்க்கண்ட், ஒடிசா, மத்திய பிரதேசம் உள்பட பல்வேறு மாநிலங்களில் நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகள் ஆதிக்கம் உள்ளது. நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகளை ஒடுக்கும் நடவடிக்கையில் மாநில சிறப்பு போலீஸ் படையுடன், மத்திய பாதுகாப்புப்படையினர் ஈடுபட்டு வருகின்றனர். அடுத்த ஆண்டு மார்ச் 31ம் தேதிக்குள் நாட்டில் நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகளை முழுவதும் ஒழிக்க மத்திய அரசு காலக்கெடு நிர்ணயித்துள்ளது.

இந்நிலையில், ஜார்க்கண்ட் மாநிலம் பொகரா மாவட்டம் கொமியா பகுதியில் உள்ள பிர்ஹொடிரா வனப்பகுதியில் மாவோயிஸ்டுகள் நடமாட்டம் இருப்பதாக பாதுகாப்புப்படையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து, மாநில போலீசாருடன் இணைந்து, மத்திய ரிசர்வ் போலீஸ் படையினர் வனப்பகுதியில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது அங்கு பதுங்கி இருந்த மாவோயிஸ்டுகள் துப்பாக்கி சூடு தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலை தொடர்ந்து பாதுகாப்புப்படையினரும் பதிலடி தாக்குதல் நடத்தினர். இரு தரப்பிற்கும் இடையே நடந்த மோதலில் 2 மாவோயிஸ்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

அதேவேளை, எல்லைப் பாதுகாப்புப்படை வீரர் வீரமரணமடைந்தார். வீரமரணமடைந்த எல்லைப்பாதுகாப்புப்படை வீரர் அசாம் மாநிலத்தை சேர்ந்தவர் ஆவார்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



கவர்னர் அளித்த விருதில் குறள் 123 லிருந்து திருடி, திருத்தி இல்லாத பாடலைத் திருக்குறள் பாடலாகப் பரப்புவது ஒரு தரம் தாழ்ந்த செயல். காவி உடை போர்த்தப்பட்ட திருவள்ளுவர் சித்திரம் போல், இல்லாத பாடலை 'குறள்' என்று பரப்புவது திருவள்ளுவரை அவமதிக்கும் ஒரு மன்னிக்க முடியாத செயல்.

**- ப.சிதம்பரம்**



திருவள்ளுவருக்கு காவி அணிவதில் ஆர்வமுள்ள கவர்னர், திருக்குறளை சரி பார்க்காமல் நினைவு பரிசு வழங்கியது மிகுந்த வேதனையளிக்கிறது. ஒரு குறளில் தவறு வந்தால் எழுத்துப் பிழை அல்லது சொற்பிழை வரலாம். ஆனால், ஒரு முழு திருக்குறளையும் வேண்டுமென்றே உள் நோக்கத்துடன் எழுதியிருப்பது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

**- செல்வப்பெருந்தகை**



கிணற்றுக்குள் இருக்கும் தவளை உலகம் இவ்வளவுதான் என்று கருதிக் கொள்ளுமாம். அதுபோல் சீமான் தன்னைத் தவிர தமிழகத்தில் யாருமே போராடுவதில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். ரிதன்யாவுக்காக மாதர் சங்கம் எழுப்பிய குரல் சீமானுக்கு கேட்காமல் போயிருக்கலாம்.

**- சண்முகம்**



தமிழகம் இந்தியாவின் முதன்மை மாநிலமாக மட்டுமின்றி, உலகின் முன்னணி நாடுகளுடன் போட்டியிடும் அளவுக்கு உயர வேண்டும் என்றால் அதற்கு தமிழகத்தை ஆளும் அரசில் பா.ம.க., பங்கேற்க வேண்டும். அது நமது உரிமையும் கூட அந்த உரிமையை வென்றெடுப்பதற்கான வெற்றிப் பயணத்தை தொடங்குவோம்.

**- அன்புமணி**

# சென்னை, கந்தக்கோட்டம், அருள்மிகு முத்துகுமாரசுவாமி திருக்கோயில் குடமுழுக்கு: அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்று தரிசனம்

**சென்னை,ஜூலை.17**

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.பி.கே.சேகர் பாபு அவர்கள் இன்று (16.07.2025) சென்னை, பூங்காநகர், கந்தக்கோட்டம், அருள்மிகு முத்துகுமாரசுவாமி திருக்கோயில் குடமுழுக்கு பெருவிழாவில் பங்கேற்று சிறப்பித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், ஆகம விதிகளின்படி குடமுழுக்கு நடைபெற்று 12 ஆண்டுகள் முடிவுற்றபின், திருப்பணிகள் மேற்கொள்ளப்படாத திருக்கோயில்களை கண்டறிந்து குடமுழுக்கு நடத்துதல், திருத்தேர் மற்றும் திருக்குளங்களை சீரமைத்தல், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில் நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்தல் போன்ற பல்வேறு பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

சென்னை, பூங்காநகர், அருள்மிகு முத்துகுமாரசுவாமி திருக்கோயில் 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையான திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு கடந்த 15.07.2013 அன்று குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. திருக்கோயில் நிதி மற்றும் உபயதாரர் நிதி ரூ.91.50 இலட்சம் மதிப்பில் திருக்கோயில் இராஜகோபுரம், அனைத்து சன்னதிகள், மண்டபங்கள் புனரமைக்கப்பட்டன. இதனை தொடர்ந்து, கடந்த 10-ஆம் தேதி விக்னேஸ்வர பூஜையுடன் தொடங்கிய யாக சாலை பூஜைகள் (16.07.2025) நடைபெற்ற ஆறாம் கட்ட யாகசாலை பூஜையில் மகா பூர்ணாஹுதிக்கு பின், கடங்கள் புறப்பட்டு, இராஜகோபுரம் மற்றும் அனைத்து விமானங்களுக்கும் புனிதநீர் ஊற்றி குடமுழுக்கு வெகு விமரிசையாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்பி.கே. சேகர் பாபு அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், இன்று வரை 3,386 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றுள்ளன. அதில் 131 திருக்கோயில்கள் முருகன் திருக்கோயில்களாகும்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, மாநகராட்சி மண்டல குழுத் தலைவர் திரு.பி.ஸ்ரீராமுலு, சென்னை இணை மண்டல இணை ஆணையர் திருமதி ஜ.முல்லை, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை பூங்காநகர் கந்தக்கோட்டம் முத்துகுமாரசாமி திருக்கோயில் குடமுழுக்கு விழாவில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்று தரிசனம் செய்தார். இதில் மேயர் ஆர்.பிரியா, மண்டல குழு தலைவர் ஸ்ரீராமுலு, இணை ஆணையர் முல்லை கலந்து கொண்டனர்.

# திருவொற்றியூர் ராஜாஜி நகரில் தார்சாலை, விளக்குபணி அதிமுக கவுன்சிலர் டாக்டர் கே.கார்த்திக் ஆய்வு



**திருவொற்றியூர், ஜூலை 17**

சென்னை மாநகராட்சி திருவொற்றியூர் மண்டலம் 7வது வட்டத்தில் அடங்கிய இராஜாஜி நகர் அம்மன் கோயில் பிரதான சாலை மற்றும் குறுக்கு தெருவில் தார் சாலைஅமைக்கும் பணியும் ராஜாஜி நகரில் 200க்கும் மேற்பட்ட தெருவிளக்குகள் அமைக்கும் பணிநடைபெற்று வருகிறது. அந்தபணிகளை அதிமுகமாமன்ற உறுப்பினர் டாக்டர் கே.கார்த்திக் பணிகள் நடைபெறும் இடத்திற்கு நேரடியாக சென்று ஆய்வுமேற்கொண்டார்.இராஜாஜி நகர் அம்மன் கோயில் தெரு பகுதியில் நடைபெறும் தெரு விளக்குபணிகளை பார்வையிட்டு மின் கேபிள்கள் ஆழமாக புதைக்க வேண்டும் என கூறி பொது மக்களுக்கு பாதுகாப்பான முறையில் பணி நடைபெற வேண்டும் என உத்தரவிட்டார். மேலும் இராஜாஜி நகர் அம்மன் கோயில் தெரு பகுதியில் சாலைபோடும்பணிகளை பார்வையிட்டு பணிகள் தரமாக நடைபெறவேண்டும் எனஅறிவுறுத்தினார்.

அவருடன் வட்ட செயலாளர் எம்.கண்ணன், முன்னாள் வட்ட செயலாளர் எஸ்.ஸ்டிபன், கிழக்கு வட்ட அம்மா பேரவை செயலாளர் சுப்பிரமணியம், மேற்கு வட்ட இளைஞர் பாசறை செயலாளர் ராஜேஷ், மேற்கு வட்ட இளைஞர் அணி இணை செயலாளர் அரவிந்த், மேற்கு வட்ட மாணவர் அணி தலைவர் ஹரி, மற்றும் பொன்.செல்வம், ரஞ்சித் ஆகியோர் கலந்துகொண்டனர்.



சென்னை ஆலந்தூர் மண்டலம் நங்கநல்லூரில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பார்வையிட்டு மனுக்களுக்கு தீர்வு வழங்கினார். இதில் துணை ஆணையர் அப்தாப் ரசூல், மண்டல குழு தலைவர் சந்திரன், மாமன்ற உறுப்பினர் துர்காதேவி கலந்து கொண்டனர்.

# சாலை பள்ளத்தில் பைக் கவிழ்ந்து பேராசிரியர் பலி

**சென்னை ஜூலை 17-**

வேளச்சேரி அண்ணாநகர் முதல் தெருவைச் சேர்ந்தவர் ஆறுமுகம் (65). இவர் சென்னை அண்ணா பல்கலைகழகத்தில் பேராசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். இவரது மனைவி மீரா, தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தை சேர்ந்தவர். இதனால் இவருக்கு சாத்தான்குளத்திலும் சொந்த வீடு உள்ளது.கடந்த சில நாட்களுக்கு முன் உறவினர் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக ஆறுமுகம், சாத்தான்குளத்திற்கு வந்திருந்தார். அப்போது அவர் தனது மகளுக்கு வரன் பார்ப்பதற்காக நெல்லை மாவட்டம் சேரன்மகாதேவிக்கு வந்தார். பின்னர் அங்கிருந்து தனது பைக்கில் சாத்தான்குளத்திற்கு புறப்பட்டு சென்று கொண்டிருந்தார்.களக்காடு – சேரன்மகாதேவி ரோட்டில் நெடுவிளை விலக்கு அருகே சென்றபோது, சாலையில் குடிநீர் குழாய் உடைந்து ஏற்பட்ட பள்ளத்தில் சிக்கி பைக் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் படுகாயமடைந்த ஆறுமுகத்தை அந்த வழியாக சென்றவர்கள் மீட்டு சிகிச்சைக்காக நாங்குநேரி அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு அவரை பரிசோதனை செய்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இதுபற்றி களக்காடு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்

# மாமனார் மற்றும் அவரது குடும்பத்தினர் மீது தாக்குதல்: மருமகன் கைது

**சென்னை ஜூலை 17-**

சென்னை, பழைய வண்ணாரப்பேட்டை, T.H. ரோடு, 2-வது சந்தில் குடும்பத்துடன் வசித்து வரும் முருகன், என்பவர் ஆட்டோ ஓட்டி வருகிறார். கடந்த 13.ந் தேதி அன்று இரவு, முருகனுக்கும், முருகனின் மருமகன் நவீன்குமாரின் தம்பிக்கும் இடையே வாய்தகராறு ஏற்பட்டுள்ளது. இது குறித்து முருகன் மற்றும் அவரது மனைவி நவீன்குமாரின் தம்பி வீட்டிற்கு சென்று அவரது தாயாரிடம் நவீன்குமாரின் தம்பி தகராறு செய்தது குறித்து கூறிவிட்டு தங்களது வீட்டிற்கு வந்தனர். பின்னர், கடந்த 14. ந் தேதி அன்று அதிகாலை, மருமகன் நவீன்குமார் மாமனார் முருகனின் வீட்டிற்கு சென்று எதற்கு எனது தாயாரிடம் புகார் செய்தீர்கள் என கேட்டு தகராறு செய்து மாமனார் முருகனை கையால் தாக்கியுள்ளார்.

மேலும் தடுக்க வந்த முருகனின் மனைவி மற்றும் முருகனின் 2வது மகளையும் நவீன்குமார் கையால் தாக்கிவிட்டு கொலை மிரட்டல் விடுத்து சென்றார். காயமடைந்த மூவரும் ஸ்டான்லி மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பின்னர், மேற்படி சம்பவம் குறித்து முருகன் தண்டையார்பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் மற்றும் தமிழ்நாடு பெண் வன்கொடுமை தடுப்பு சட்டம் ஆகிய பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். தண்டையார்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி நவீன்குமார், என்பவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட எதிரி நவீன்குமார் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

# தலைமை செயலக குடியிருப்பு பகுதியில் மாவா விற்பனை செய்தவர் கைது

**சென்னை ஜூலை 17-**

சென்னை தலைமை செயலக குடியிருப்பு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் காவல் குழுவினர் எஸ்.வி.எம். நகர் பூங்கா உள்ளே சந்தேகத்திற்கிடமாக நின்றிருந்த நபரை விசாரணை செய்து, அவர் வைத்திருந்த பையை சோதனை செய்தபோது, அதில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட மாவா பாக்கெட்டுகள் மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.

அதன்பேரில் தலைமை செயலக குடியிருப்பு காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, சட்டவிரோதமாக மாவா புகையிலை பொருட்களை விற்பனை செய்ய வைத்திருந்த எதிரி திவாகர்(எ)தீனா, என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 2.5 கிலோ எடை கொண்ட 192 மாவா பாக்கெட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் எதிரி திவாகர்(எ)தீனா மீது ஏற்கனவே 2 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய தலைமறைவு எதிரிகளை தனிப்படையினர் தேடி வருகின்றனர்.கைது செய்யப்பட்ட எதிரி திவாகர்(எ)தீனா விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

# தைலம், கற்பூரம் கலந்து மூக்கில் தேய்த்ததால் 8 மாத குழந்தை மூச்சு திணறல் ஏற்பட்டு பலி

**சென்னை ஜூலை 17-**

தைலம் மற்றும் கற்பூரம் கலந்து உடலில் தேய்த்ததால் 8 மாத குழந்தை திடீரென மூச்சு திணறல் ஏற்பட்டு உயிரிழந்தது. சென்னை அபிராமபுரம் ஆர்.கே.சாலை வல்லவன் நகரை சேர்ந்தவர் தேவநாதன்(28). இவர் தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார். இவருக்கு திருமணமாகி யாழினி என்ற 8 மாத பெண் குழந்தை இருந்தது. கடந்த 13ம் தேதி குழந்தைக்கு அதிகளவில் சளி இருந்ததாக கூறப்படுகிறது. இதனால் நாட்டு வைத்தியம் என்று தைலத்துடன் கற்பூரம் கலந்து குழந்தையின் மார்பு, மூக்கில் தேய்த்துள்ளனர்.

சிறிது நேரத்தில் குழந்தைக்கு திடீரென மூச்சு திணறல் ஏற்பட்டது. உடனே தேவநாதன் தனது குழந்தையை மீட்டு எழும்பூரில் உள்ள குழந்தைகள் நல மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். அங்கு தீவிர சிகிச்சை பெற்று வந்த குழந்தை நேற்று உயிரிழந்தது. பின்னர் சம்பவம் குறித்து மருத்துவமனை நிர்வாகம் அபிராமபுரம் போலீசாருக்கு தகவல் அளித்தனர். அதன்படி போலீசார் குழந்தையின் தந்தை தேவநாதனிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவத்தால் சிறிது நேரம் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# கொடுங்கையூர் பகுதியில் வாலிபர் கொலை வழக்கில் 6 பேர் கைது

**சென்னை ஜூலை 17-**

சென்னை, எம்.கே.பி. நகர், புது நகர் 10வது தெருவைச் சேர்ந்த சங்கர், என்பவர் 14. ந் தேதி அன்று அதிகாலை, கொடுங்கையூர், எருக்கஞ்சேரி, ஜி.என்.டி. சாலையிலுள்ள அம்மா உணவகம் பின்புறமுள்ள காலி மைதானத்தில் வெட்டுக்காயங்களுடன் இறந்து கிடப்பதாக கிடைத்த தகவலின்பேரில், கொடுங்கையூர் காவல் நிலைய போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று சங்கரின் பிரேதத்தை மீட்டு உடற்கூராய்வுக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இது குறித்து, இறந்துபோன சங்கரின் தாயார் கொடுங்கையூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மீது கொலை உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

கொடுங்கையூர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, இக்கொலை வழக்கில் தொடர்புடைய 1.நித்தின்குமார், 2.ஸ்டீபன்ராஜ், 3.லிங்கேஷ்வரன், 4.ஜாபர் அகமது, 5.பாலாஜி, 6.நவீன் (எ) பாலா, ஆகிய 6 நபர்களை கைது செய்தனர். மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய 2 இளஞ்சிறார்களிடம் விசாரணை செய்தனர். இவர்களிடமிருந்து 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் கடந்த 13ந் தேதி அன்று இரவு, இறந்துபோன சங்கர் தனது பிறந்த நாளையொட்டி கொடுங்கையூர், இந்திராகாந்தி நகரில் கேக் வெட்டி கொண்டாடிய போது, அங்கு இருசக்கர வாகனத்தில் வந்த எதிரிகள் ஸ்டிபன், நித்தின், லிங்கேஷ் ஆகியோருக்கும், சங்கருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டபோது, சங்கர் ஸ்டீபனை தாக்கியதால், 3 பேரும் உன்னை என்ன செய்கிறேன் பார் எனக்கூறி சென்றதும், பின்னர் 14.ந் தேதி அன்று அதிகாலை, சங்கர் அவரது நண்பர்களுடன் மேற்படி சம்பவ இடமான அம்மா உணவகம் பின்புறமுள்ள காலி இடத்தில் மது அருந்திக் கொண்டிருந்தபோது, அங்கு வந்த ஸ்டீபன், நித்தின், லிங்கேஷ் உட்பட சுமார் 10 பேர் சங்கரை கத்தியால் தாக்கும்போது, நண்பர்கள் தப்பியோடவே, எதிரிகள் சங்கரை கத்தியால் தாக்கிவிட்டு தப்பிச் சென்றது தெரியவந்தது.

மேலும் விசாரணையில் எதிரிகள் நித்தின்குமார் மீது 4 குற்ற வழக்குகளும், ஸ்டீபன் ராஜ் மற்றும் லிங்கேஷ்வரன் மீது தலா 5 குற்ற வழக்குகளும் உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட 6 பேரை விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டனர். 2 இளஞ்சிறார்கள் சிறார் நீதிக்குழுமத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறுவர் கூர்நோக்கு இல்லத்தில் சேர்க்கப்பட்டனர்.

மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய மற்ற தலைமறைவு எதிரிகளை காவல் குழுவினர் தேடி வருகின்றனர்.

# போதைப்பொருட்கள் வைத்திருந்த வழக்கில் மேலும் இருவர் கைது

**சென்னை ஜூலை 17-**

போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவு தனிப்படையினர் மற்றும் எம்.ஜி.ஆர். நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருடன் ஒருங்கிணைந்து, கடந்த 12 ந் தேதி அன்று மதியம், எம்.ஜி.ஆர். நகர், கே.கே.சாலையிலுள்ள ஒரு ஓட்டல் அருகே கண்காணித்து, அங்கு சட்டவிரோதமாக மெத்தம்பெட்டமைன் போதைப் பொருள் வைத்திருந்த சங்கரநாராயணன், பிரசாந்த், ஆகாஷ்குமார் மற்றும் மணிகண்டசாமி ஆகிய 4 பேரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களிடமிருந்து 3 கிராம் மெத்தம்பெட்டமைன் மற்றும் 28 கிராம் கஞ்சா பேஸ்ட் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது.

சென்னை எம்.ஜி.ஆர். நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிரமாக கண்காணித்து, இவ்வழக்கில் தொடர்புடைய தலைமறைவு எதிரிகள் 1.அவினாஷ், 2.வினோதினி (எ) ஜாய்ஸ், ஆகிய 2 பேரை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட 2 எதிரிகளும், விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

# ஆயிரம்விளக்கு பகுதியில் செல்போன் திருட்டு சம்பவங்களில் ஈடுபட்ட இருவர் கைது

**சென்னை ஜூலை 17-**

சென்னை, ஆயிரம்விளக்கு பகுதியில் வசித்து வரும் மதுரையைச் சேர்ந்த லோகேஸ்மூர்த்தி, என்பவர் ஆயிரம் விளக்கு பகுதியில் உள்ள ஒரு ஐஸ்கீரீம் கடையில் வேலை செய்து வருகிறார். இவர் கடந்த 9 ந் தேதி அன்று இரவு, அண்ணாசாலை பகுதியில் உள்ள மதுக்கடையில் மது வாங்கிவிட்டு, திரும்பி வந்து பார்த்தபோது, அவரது சட்டைப்பையில் வைத்திருந்த 1 செல்போனை யாரோ திருடிச் சென்றது தெரியவந்தது. இது குறித்து லோகேஸ்மூர்த்தி, ஆயிரம்விளக்கு காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

ஆயிரம்விளக்கு காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி செல்போன் திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகள் 1.சூர்யா, 2.விஜய், ஆகிய 2 நபர்களை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 3 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் எதிரிகள் இருவரும் சேர்ந்து புகார்தாரர் மதுவாங்க நின்று கொண்டிருந்தபோது, அவரது சட்டைப்பையில் வைத்திருந்த செல்போனை திருடி, அதை விற்று, பணத்தை செலவு செய்ததும், மேலும் இதே போல வேறு இடங்களிலும் செல்போன் திருட்டு சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதும் தெரியவந்தது.

# நேப்பியர் பாலம் அருகே கூவம் ஆற்றில் குதித்து இளைஞர் தற்கொலை

**சென்னை ஜூலை 17-**

சென்னை நேப்பியர் பாலம் அருகே கூவம் ஆற்றில் குதித்து இளைஞர் தற்கொலை செய்து கொண்டார். தற்கொலை செய்துகொண்ட இளைஞரின் உடலை தீயணைப்பு வீரர்கள் பைபர் படகு மூலம் தேடி வருகின்றனர்.

# தேனாம்பேட்டை பகுதியில் மதுபாட்டில்களை விற்ற பெண் கைது

**சென்னை ஜூலை 17-**

சென்னை தேனாம்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர் தி.நகர், டாக்டர் தாமஸ் சாலையில் கண்காணித்து, அங்கு சந்தேகத்திற்கிடமாக நின்று கொண்டிருந்த ஒரு பெண்ணை விசாரணை செய்தபோது, அவர் சட்டவிரோதமாக மதுபாட்டில்களை விற்பனைக்காக வைத்திருந்தது தெரியவந்தது.

அதன்பேரில், தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து, சட்டவிரோதமாக மது பாட்டில்களை விற்பனைக்காக வைத்திருந்த எதிரி சுமதி, என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 39 மதுபாட்டில்கள் மற்றும் பணம் ரூ.300/- பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி சுமதி மீது ஏற்கனவே மது பாட்டில்கள் விற்பனை செய்தது தொடர்பாக 6 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரி சுமதி விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

**மழைநீர் உயிர்நீர்**



சென்னை அண்ணாநகர் மண்டலம் வில்லிவாக்கம் சிட்கோநகரில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது. இதில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு தங்களின் குறைகள் குறித்து மனு அளித்து, நிவர்த்தி செய்து கொண்டனர்.

புதிய அரசு கட்டிடங்கள் திறப்பு விழா:

# திமுக ஆட்சியில் தான் கிராமங்கள் தோறும் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன

## துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி பெருமிதம்



**கீழ்பென்னாத்தூர், ஜூலை.17-**

திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட கலிங்கலேரி ஊராட்சியில் ஆரம்ப பள்ளி கட்டிடம், ஊராட்சி மன்ற கட்டிடம், கோணலூர் ஊராட்சியில் புதிய ஊராட்சி மன்ற கட்டிடம், நாடழகானந்தல் ஊராட்சியில் கருமகாரிய மண்டபம், நாடகமேடை, மேநீர் தொட்டி ராஜந்தாங்கல் ஊராட்சியில் புதிய ஊராட்சி மன்ற கட்டிடம், கீக்களூர் ஊராட்சியில் கருமகாரிய மண்டபம், சத்துணவு சமையல் அறை கட்டிடம் நாரியமங்கலத்தில் பல்நோக்கு கட்டிடம் (நியாய விலைக்கடை) ஐங்குணம் ஊராட்சியில் புதிய ஊராட்சி மன்ற கட்டிடம், ஆராஞ்சி ஊராட்சியில் குமாரகுடியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் அங்கன்வாடி மைய கட்டிடம் உள்ளிட்ட ஊராட்சிகளில் ரூ.2.11 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட அரசு கட்டிடங்கள் திறப்பு விழா நேற்று நடைபெற்றது.

இந்த விழாவுக்கு முன்னாள் மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் ஆராஞ்சி ஏ.எஸ்.ஆறுமுகம் தலைமை தாங்கினார். முன்னாள் கீழ்பென்னாத்தூர் ஊராட்சி ஒன்றியகுழு துணை தலைவர் வாசுகி ஆறுமுகம் முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர் ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகிக்க கீழ்பென்னாத்தூர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் எஸ்.அருணாச்சலம் அனைவரையும் வரவேற்றார். இதில் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்ட தமிழ்நாடு சட்டப்பேரவை துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி புதிய அரசு கட்டிடங்களை திறந்துவைத்த மக்கள் பயன்பாட்டுக்கு அர்ப்பணித்த அவர் சிறப்புரையாற்றுகையில் திமுக ஆட்சியில் தான் கிராமங்கள் தோறும் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. மு.க.ஸ்டாலின் தலைமையிலான ஆட்சியில் தான் அடிப்படை தேவைகள் அக்கறையுடன் நிறைவேற்றி தரப்பட்டு வருகிறது. பைப்பை திறந்த உடன் குடிதண்ணீர் வருகிற ஒரே மாநிலம் தமிழ்நாடு தான். உத்திர பிரதேசத்தில் மூன்று கிலோ மீட்டர் தூரம் சென்று தண்ணீர் எடுத்து வருகிற நிலையில் உள்ளது. உங்களுடன் ஸ்டாலின் என்ற திட்டம் துவக்கப்பட்டிருக்கிறது. மகளிர் உரிமைத் தொகை கிடைக்காதவர்கள் இந்த முகாமை பயன்படுத்தி மனுக்களை அளித்து பயன் பெறலாம் என்றார்.

இந்த விழாவில் மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் ம.ஜெயபாரதிமணி மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சுகனேஸ்வரன் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஆர்.அன்பழகன் ஒன்றிய உதவி பொறியாளர்கள் சிவக்குமார் ரவிசந்திரன் கலையரசி தாசில்தார் ஜான்பாஷா முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் சோமாசிபாடி சிவக்குமார் ராஜன்தாங்கல் ஆர்.அன்பழகன் டாஸ்மாக் தொமுச மாவட்ட நிர்வாகி ஆறுமுகம் ஊராட்சி செயலாளர்கள் ஜி.வெங்கடேசன் தனசேகர் ஜெ.சுகன்யா குமரேசன் அரசு ஒப்பந்ததாரர்கள் கோவிந்தராஜ் ஆர்.விக்னேஷ்வர் உள்பட அரசு அலுவலர்கள் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

# தி.மலையில் காமராஜர் பிறந்த நாள் விழா: திமுக, தவெக காங்கிரஸ் கட்சியினர் மாலை அணிவித்து மரியாதை



**திருவண்ணாமலை, ஜூலை.17-**

பெருந்தலைவர் காமராஜர் 123-வது பிறந்தநாள் விழா நாடுமுழுவதும் நேற்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி திருவண்ணாமலை செங்கம் சாலையிலுள்ள பெருந்தலைவர் காமராஜர் திருவுருவ சிலைக்கு தெற்கு மாவட்ட திமுக சார்பில் துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் மாநில மருத்துவரணி துணை தலைவர் எ.வ.வே.கம்பன் மாவட்ட தலைவர் கோ.கண்ணன் மாநகர மேயர் நிர்மலாவேல் மாறன் மாநகர செயலாளர் கார்த்திவேல்மாறன் உள்பட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இதேபோல தெற்கு மாவட்ட தவெக சார்பில் மாவட்ட செயலாளர் கே.பாரதிதாசன் தலைமையில் நிர்வாகிகள் காமராஜர் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்தது மரியாதை செலுத்தினர். இதனைத் தொடர்ந்து சாலையோர வியாபாரிகள் மற்றும் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. இதில் மாவட்ட பொருளாளர் க.இளங்கோவன் மாவட்ட இணை செயலாளர் கலைச்செல்வன் மாநகர செயலாளர் ஆர்.ஆர்.ரமேஷ் உள்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தெற்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் மாவட்ட தலைவர் செங்கம் ஜி.குமார் தலைமையில் நிர்வாகிகள் பெருந் தலைவர் காமராஜர் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்தனர். இதனைத் தொடர்ந்து ஒசிபி அணி மாவட்ட தலைவர் பி.ரங்கநாதன் தலைமையில் பொதுமக்கள் மற்றும் கட்சி தொண்டர்களுக்கு வேட்டி துண்டு மற்றும் இனிப்பும் வழங்கப்பட்டது. இதில் மாநகர தலைவர் என்.வெற்றிசெல்வன் மாவட்ட துணை தலைவர்கள் வி.கோவிந்தராஜ் அண்ணாச்சி மாநில பொதுக்குழு உறுப்பினர் எம்.கோபாலகிருஷ்ணன் மாவட்ட மகளிரணி தலைவி வினோதினி சக்திவேல் முன்னோடி நிர்வாகி வி.எஸ்.மணிகண்டன் உள்பட பலர் கலந்துகொண்டனர். ஐக்கிய ஜனதாதளம் கட்சி சார்பில் மாவட்ட தலைவர் டி.ராஜாராம் தலைமையில் மாநில துணை தலைவர் ஏ.ஆர்.பார்த்திபன் காமராஜர் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் மாநில செயலாளர் எம்.ஜெய்சங்கர் நகர தலைவர் ஆர்.ஜி.வாசுதேவன் நகர நிர்வாகிகள் கே.சுரேஷ் எம்.சங்கர் எஸ்.சூர்யா ஜி.தனுசு எல்.ஜெயராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்மாநில காங்கிரஸ் கட்சி சார்பில் மாவட்ட தலைவர் ராயர் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் மாநில இணை செயலாளர் கே.அருள் மாவட்ட பொருளாளர் எஸ்.அருள் மாவட்ட துணை தலைவர் த.உத்தண்டி நகர தலைவர் பி.ஏ.முத்தலிப் உள்பட பலர் கலந்துகொண்டனர். திருவண்ணாமலை அவலூர்பேட்டை சாலையிலுள்ள பாஜக அலுவலகத்தில் பெருந்தலைவர் காமராஜர் 123வது பிறந்தநாள் விழா நேற்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த காமராஜரின் திருவுருவ படத்திற்கு மாவட்ட தலைவர் கே.ரமேஷ் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தியதோடு கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுக்கும், சாலையோரத்தில் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களுக்கும் இனிப்பு வழங்கினார். இதே போல மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும், பள்ளி கல்லூரிகளிலும் பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. இதையொட்டி ஏழைஎளியோர்களுக்கு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

வட்டாட்சியர் அவர்கள்
திருப்பத்தூர்
ந.க.ஆ4/3446/2025
நாள்:07.07.2025
நவிதா, க/பெ.பூபதி,
எக்கூர் கிராமம்,
ஊத்தங்கரை வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்
........மனுதாரர்
உயர்திரு.வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருப்பத்தூர்.
........எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாரராகிய, எனது தாத்தா சிவலிங்கம் த/பெ.அருணாசலம் என்பவர் கடந்த 29.11.2007-ம் தேதியில் திருப்பத்தூர் மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், எக்கூர் கிராமத்தில் பிறந்தார். மேற்படி அவரது பிறப்பை பதிவு செய்து பிறப்பு சான்றிதழ் வழங்கிட கோரி மேற்படி வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 தினங்களுக்குள் மேற்படி வட்டாட்சியர் அவர்கள் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம்.
//உத்தரவுப்படி//
மனுதாரர்
நவிதா, க/பெ.பூபதி,
எக்கூர் கிராமம்,
ஊத்தங்கரை வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers No.18/19 R.N.R. Arcade, Katpadi Road Vellore-4
Ph: 0416-4203997
E-Mail: velloredi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2003/15101
Editor: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only



ராணிப்பேட்டை, ஆற்காடு நகராட்சியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் மனுக்கள் பதிவு செய்யப்படுவதை கலெக்டர் ஜெ.யு.சந்திரகலா பார்வையிட்டுபயனாளிகளுக்குநலத்திட்டஉதவிகளைவழங்கினார்.இந்நிகழ்வில்சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன், நகரமன்ற தலைவர் தேவி பென்ஸ் பாண்டியன், துணைத் தலைவர் பவளக்கொடி சரவணன் மற்றும் பலர் உள்ளனர்.

செங்கம் நகராட்சியில் நடைபெற்ற

# உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம்: எம்எல்ஏ மு.பெ.கிரி தொடங்கி வைத்தார்



**செங்கம் ஜூலை17**

செங்கம் நகராட்சியில் ஒன்று முதல் ஏழு வார்டு வரை உள்ள பொதுமக்களுக்கு செங்கம் கணேசர் திருமண மண்டபத்தில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம் நடைபெற்றது. கூட்டத்திற்கு நகர மன்ற தலைவர் சாதிக்பாஷா தலைமை தாங்கினார். கோயில் அறங்காவலர்கள் குழு தலைவரும் நகர திமுக செயலாளருமான அன்பழகன் முன்னாள் பேரூராட்சி தலைவர் சென்னம்மாள் முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகராட்சி ஆணையாளர் பாரத் அனைவரையும் வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக செங்கம் எம்எல்ஏ மு.பெ.கிரி கலந்துகொண்டு குத்துவிளக்கேற்றி முகாமினை தொடங்கி வைத்து பேசியதாவது. பொதுமக்களின் வீடுகளுக்கு நேரில் சென்று அவர்களின் கோரிக்கைகள் மற்றும் குறைகளை கேட்டு தீர்வு காண சிறப்பு முகாம்கள் நடத்த வேண்டும். மேலும் பொது மக்களுக்கு அரசின் சேவைகளும் திட்டங்களும் எளிதில் கிடைக்கும் வகையில் இந்த முகாம்களில் நகர்ப்புற பகுதிகளில் 13 அரசு துறைகளை சார்ந்த சேவைகளும் ஊரகப் பகுதிகளில் 15 துறைகளில் சேவைகளும் வழங்கப்படும். மேலும் முகாம் நடைபெறும் இடங்களில் பொதுமக்களின் நலனுக்காக மருத்துவ முகாம்கள் நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தன்னார்வலர்கள் வீடு வீடாக சென்று முகாம் விபரங்களையும் விண்ணப்பங்களையும் எவ்வாறு அளிப்பது. மனுக்குளுடன் இணைக்க வேண்டிய விபரங்கள் குறித்து பொதுமக்களிடம் விளக்க உள்ளனர். முகாமில் பெற்ற விண்ணப்பங்கள் மீது 45 நாட்களில் நடவடிக்கை எடுக்கப்படும் தீர்வு காணப்படும் எனவே இந்த முகாம்களை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என பேசினார் நிகழ்ச்சியில் கோட்டாட்சியர் ராஜசேகரன் வட்டாட்சியர் ராமபிரபு கிராம நிர்வாக அலுவலர் விஜயகுமார் திமுக ஒன்றிய செயலாளர் கோளாப்பாடி பொதுக்குழு உறுப்பினர் பிரபாகரன் செந்தில் நகர மன்ற உறுப்பினர்கள் ஜாபீர்பாஷா சந்தியா ராபின்சன் அஞ்சலை பாலு சத்தியா முல்லை ரேவதி முருகமணி அமுதா தட்சிணாமூர்த்தி இந்திரா மற்றும் திமுக நிர்வாகிகள் ஸ்ரீதர் செந்தில் அப்துல்வாஹித் சீனிவாசன் அப்துல்சத்தார் மற்றும் அரசு அதிகாரிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்

தேவலாபுரம் ஊராட்சியில்

# காமராஜர் பிறந்த நாளை முன்னிட்டு ஸ்டார்ட் பள்ளியில் பேச்சுப்போட்டி



**திருப்பத்தூர், ஜூலை ;16-**

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த தேவலாபுரம் ஊராட்சி பகுதியில் ஸ்டார் பள்ளி இயங்கி வருகிறது.

தமிழக முன்னாள் முதல்வரும் முன்னாள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தலைவருமான காமராஜர் பிறந்த நாளை முன்னிட்டு கல்வி வளர்ச்சி நாள் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஓபிசி ஆர்.ராஜேஷ் தலைமை தாங்கினார்.

இதில் முன்னாள் முதல்வர் காமராஜரின் திருவுருவ படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர் காங்கிரஸ் கட்சி திருப்பத்தூர் மாவட்ட மகளிர் அணி ஆர்.ஜான்சிராணி ராஜேஷ் அவர்கள் மாணவர்களுக்கு பேனா பென்சில் உள்ளிட்ட பொருள்கள் வழங்கினார்.


பின்னர் காமராசர் குறித்து பேச்சு பல்வேறு போட்டிகள் வைத்து அதில் வெற்றி பெற்ற பள்ளி மாணவர்களுக்கு பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் ஸ்டார் பள்ளி நிர்வாகி எஸ். சுப்பிரமணி, தலைமை ஆசிரியர் பி.ஜெயசுதா, சிறுபான்மை தலைவர். காஜா மொய்தின் சிறுபான்மை ரியாஸ் அக மத் இளைஞர் காங்கிரஸ் முன்னாள் பேர்ணாம்பட்டு ஒன்றிய தலைவர்.ராகுல் இருபால் பிரியங்கா அஜய் மற்றும் பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள் பள்ளி நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். இறுதியில் முடிவில் பி.பாபு நன்றி கூறினார்.



அரக்கோணம் சந்திப்பு லைன்ஸ் சங்க தலைவர் உதயகுமார் செயலாளர் பிரபு பதவியேற்பில் மாவட்ட முதல் துணை ஆளுநர் பூர்ணசந்திரன் 2-ம் துணை ஆளுநர் ரவி ஆகியோர் முன்னிலையில் நலதிட்டஉதவிகளை பொருளாளர் ரமணன் வழங்கினார். அருகில் முன்னாள் ஆளுநர் அரிதாஸ் உள்ளார்.

# டிஆர்எஸ் குளோபல் பள்ளி மாணவ தலைவர், நிர்வாகிகள் பதவியேற்பு



**அரக்கோணம் ஜூலை 17**

1ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் அருகே டி.ஆர்எஸ் குளோபல் சிபிஎஸ்இ பள்ளி உள்ளது இங்கு 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கின்றனர் இவர்களுக்கான தலைவர் செயலாளர் நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது இதில் 40 பேர் போட்டியிட்டனர் இவர்களில் 16பேர் தேர்ந்தெடுக்க பட்டனர் இவர்களில் பள்ளி மாணவர் தலைவராக அபினவ்.டி மாணவி தலைவராக அ.கபிலயா கேத்திரீனா உதவி மாணவர் தலைவராக சிவபிரசாத்.எல் உதவி மாணவி தலைவராக பெல்லம் ரமேஷ் சிவாணி விளையாட்டு செயலாளராக இஷான் சுண்டி உதவி விளையாட்டு செயலாளராக வி.லோகிதா கலாச்சார செயலாளர் சாதனா. உதவி கலாச்சார செயலாளர் முகமது அஜ்மல்.எம் மற்றும் மார்ஸ்- கேப்டன் ஜெ. தினேஷ் குமார் மார்ஸ்- துணை கேப்டன் தோஷிகா.எஸ் வீனஸ்-கேப்டன் சுனில் குமார்.வீனஸ்-துணைக் கேப்டன் சஜிக்ஷா.கே வியாழன்- கேப்டன் சா.புகழேந்தி வியாழன் துணைக் கேப்டன் எஸ்.ஷமிதா மெர்குரி- கேப்டன் முகமது ரிஸ்வான் அலி மெர்குரி-வைஸ் கேப்டன் அமிர்தா.டி ஆகியோர் பொறுப்பேற்றனர். முன்னதாக விழாவிற்கு பள்ளி முதல்வர் கவிதா தலைமை வைத்தார் சிறப்பு விருந்தினராக நெமிலி காவல் ஆய்வாளர் எஸ்.விஜயலட்சுமி கலந்து கொண்டார் பெற்றோர்கள் பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் திரளாக கலந்து கொண்டனர் நிகழ்ச்சிகளை நிர்வாக அலுவலர் சுரேஷ் ஏற்பாடு செய்திருந்தார்

ரூ. 3 கோடியே 60 லட்சம் மதிப்பீட்டில்

# செஞ்சி பேரூராட்சியில் புதிய அறிவு சார் மையம் மற்றும் புதிய மேம்பாலம் கட்டும் பணிக்கான பூமி பூஜை

## செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தொடங்கி வைத்தார்



**செஞ்சி ஜூலை-17,**

விழுப்புரம் மாவட்டம்செஞ்சி பேரூராட்சியில் புதியஅறிவுசார் மையம் கட்டிடம் மற்றும் திண்டிவனம் சாலை பயணியர் விடுதி எதிரில் புதிய மேம்பாலம் கட்டவேண்டும் என பொதுமக்கள் அரசுக்கு கோரிக்கை வைத்தனர்.

இதையடுத்து பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று செஞ்சி பேரூராட்சி மேல் காளவாய் செல்லும் சாலை அருகில் மூலதனம் மானிய நிதி திட்டத்தின் கீழ் 1 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய அறிவுசார் மையம் கட்டிடம் கட்டுவதற்கும், நபார்டு திட்டத்தின் கீழ் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திண்டிவனம் பயணியர் விடுதி அருகில் புதிய மேம்பாலம் கட்டுவதற்கு பூமி பூஜை விழா நடைபெற்றது.

செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் தலைமை தாங்கினார்.

பேரூராட்சி செயல் அலுவலர் கலையரசி அனைவரையும் வரவேற்றார்.

முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ.கலந்துகொண்டு 3 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய அறிவுசார் மையம் கட்டிடம், புதிய மேம்பாலம் கட்டுவதற்கு பூமிபூஜை செய்து பணிகளை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயக்குமார், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, மாவட்ட விவசாய அணி தலைவர் அஞ்சாஞ்சேரி கணேசன், நகர செயலாளர் கார்திக், பேரூராட்சி மன்ற துணை தலைவர் ராஜலட்சுமி செயல் மணி, அரசு வழக்கறிஞர் கிருஷ்ணன்உள்ளிட்டபேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள், நகர நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

தமிழ்நாடு அரசு - பொதுப்பணித்துறை
கட்டடம் (க & ப) வட்ட அலுவலகம், சிவகங்கை
ஒப்பந்தப்புள்ளி படிவம் / மொத்த ஒப்பந்தம் / இனவிலைமுறை
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 10 க.பொ / கட்டடம் (க&ப) வட்டம் / சிவ / 2025-2026 / நாள் : 15.07.2025
தமிழக ஆளுநரின் சார்பாக கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து, கட்டட (க & ப) வட்டம், சிவகங்கை அவர்களால் பன்னிரெண்டு பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது.
1) வ.எண்.1 முதல் 6 வரை - ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் 22.07.2025 மாலை 03.00 மணி முதல் 05.08.2025, மாலை 03.00 மணி வரை இணையதளத்தில் கிடைக்கும், (மின்னணு முறை)
வ.எண்.7 முதல் 12 வரை- ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் 23.07.2025 மாலை 03.00 மணி முதல் 06.08.2025, மாலை 03.00 மணி வரை இணையதளத்தில் கிடைக்கும், (மின்னணு முறை)
2) வ.எண்.1 முதல் 6 வரை - ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதி 05.08.2025, மாலை 03.00 மணி வரை (மின்னணு முறை)
வ.எண்.7 முதல் 12 வரை - ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதி 06.08.2025, மாலை 03.00 மணி வரை (மின்னணு முறை)
3) வ.எண்.1 முதல் 6 வரை - ஒப்பந்தப்புள்ளி 06.08.2025, 03.00 மணியளவில் திறக்கப்படும் (மின்னணு முறை) முன் தகுதி விண்ணப்பம் மட்டும் திறக்கப்படும்
வ.எண்.7 முதல் 12 வரை - ஒப்பந்தப்புள்ளி 07.08.2025, 03.00 மணியளவில் திறக்கப்படும் (மின்னணு முறை) முன் தகுதி விண்ணப்பம் மட்டும் திறக்கப்படும்
4) வ.எண். 1 முதல் 6 வரை - ஒப்பந்ததாரர் பணித்தளத்தினை பார்வையிட்ட சான்றிதழ் பெறுவதற்கு விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள்.29.07.2025
வ.எண். 7 முதல் 12 வரை - ஒப்பந்ததாரர் பணித்தளத்தினை பார்வையிட்ட சான்றிதழ் பெறுவதற்கு விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள்.30.07.2025
5) வ.எண். 1 முதல் 6 வரை - செயற்பொறியாளரிடமிருந்து பணித்தளத்தினை பார்வையிட்ட சான்றிதழ் பெறுவதற்கான கடைசி நாள்.04.08.2025
வ.எண். 7 முதல் 12 வரை -செயற்பொறியாளரிடமிருந்து பணித்தளத்தினை பார்வையிட்ட சான்றிதழ் பெறுவதற்கான கடைசி நாள்.05.08.2025
ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் வேலையின் தோராய மதிப்பு, முன் வைப்புத் தொகை விவரங்கள், பணிக்காலம் மற்றும் இதர விவரம் அரசு இணையதளமான https://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் திருத்தங்கள் / மாறுதல்கள் ஏதேனும் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என தெரிவிக்கப்படுகிறது.
செ.ம.தொ.இ./ 3645/ ஒப்பந்தப்புள்ளி / 2025
கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து
கட்டடம் (க & ப) வட்டம், சிவகங்கை

தமிழ்நாடுஅரசு
பொதுப்பணித்துறை
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண். 21/2025–2026/க(க&ப)வ1/சென்னை/ நாள்: 15.07.2025
ஒப்பந்தம் Lumpsum (இணையதள வழியில் மட்டும்)
தமிழ்நாடு ஆளுநரின்சார்பாக, கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட கட்டுமான (ம) பராமரிப்பு வட்டம்1, சேப்பாக்கம், சென்னை–5 அவர்களால் கீழ்க்காணும் பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் பொதுப்பணித்துறையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி பெற்றுக் கொள்ளப்படும்.

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு லட்சங்களில் | முன்வைப்புத் தொகை (ரூபாயில்) மற்றும் பணி முடிக்க வேண்டிய காலம் | தகுதி பெற்ற பதிவு செய்த ஒப்பந்தக்காரர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| | ஒரு உறை முறை | | | |
| 1. | திருவள்ளூர் மாவட்டம், எகாட்டூரில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் 4 வகுப்பறைகள், ஒரு ஆண்கள் கழிப்பறை மற்றும் ஒரு பெண்கள் கழிப்பறை கட்டும் பணி | ரூ.108.00 இலட்சங்கள் | ரூ.64,000/ 7 (ஏழு) மாதங்கள் | பொதுப்பணித் துறையில் பதிவு பெற்ற வகுப்பு 4 மற்றும் அதற்கு மேல் (திருத்திய வகுப்பின்படி) |
| 2. | திருவள்ளூர் மாவட்டம் மேலகொண்டையூரில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் 5 வகுப்பறைகள், ஒரு ஆண்கள் கழிப்பறை மற்றும் ஒரு பெண்கள் கழிப்பறை கட்டும் பணி | ரூ.130.00 இலட்சங்கள் | ரூ.75,000/ 7 (ஏழு) மாதங்கள் | |
| 3. | திருவள்ளூர் மாவட்டம் வெண்மனம்புதூரில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் 6 வகுப்பறைகள், ஒரு ஆண்கள் கழிப்பறை மற்றும் ஒரு பெண்கள் கழிப்பறை கட்டும் பணி | ரூ.152.50 இலட்சங்கள் | ரூ.87,000/ 9 (ஒன்பது) மாதங்கள் | |
| 4. | திருவள்ளூர் மாவட்டம், கூவத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் 8 வகுப்பறைகள் கட்டும் பணி | ரூ.179.00 இலட்சங்கள் | ரூ.1,00,000/ 9 (ஒன்பது) மாதங்கள் | |
| 5. | திருவள்ளூர் மாவட்டம், மணவாளநகரில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் 4 வகுப்பறைகள் கட்டும் பணி. | ரூ.89.25 இலட்சங்கள் | ரூ.55,000/ 7 (ஏழு) மாதங்கள் | |
| 6. | திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டையில் உள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 5 வகுப்பறைகள் கட்டும் பணி. | ரூ.111.00 இலட்சங்கள் | ரூ.66,000/ 7 (ஏழு) மாதங்கள் | |
| 7. | திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூரில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் 3 வகுப்பறைகள், ஒரு ஆண்கள் கழிப்பறை, ஒரு பெண்கள் கழிப்பறை மற்றும் சுற்றுச்சுவர் கட்டும் பணி | ரூ.100.00 இலட்சங்கள் | ரூ.60,000/ 6 (ஆறு) மாதங்கள் | |


குறிப்பு:
1. ஒப்பந்தப்புள்ளி குறித்த தகவல்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் கீழ்க்காணும் இணையதளத்தின் மூலம் இலவசமாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். http://tntenders.gov.in
2. பணித்தள ஆய்வு சான்று உரிய செயற்பொறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பிக்க கடைசி நாள். 29.07.2025.
3. இணையதளம் வாயிலாக நிறைவு செய்யப்பட்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாளும், நேரமும் 01.08.2025 மாலை 3.00 மணி வரை
4. பெறப்பட்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாளும், நேரமும் 01.08.2025 மாலை 4.00 மணி
5. ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை மற்றும் ஒப்பந்தத்தில் ஏதேனும் மாற்றங்கள் / திருத்தங்கள் இருப்பின் http://tntenders.gov.in> இணையதளத்தில் மட்டுமே தெரிவிக்கப்படும்
செ.ம.தொ.இ/3646/ஒப்பந்தப்புள்ளி/2025
கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து.,
கட்டட கட்டுமான (ம) பராமரிப்பு வட்டம்–1, சேப்பாக்கம், சென்னை–5.

தமிழ்நாடு அரசு / பொதுப்பணித்துறை
கண்காணிப்புப் பொறியாளர் பொ.ப.து., கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்ட அலுவலகம். சேலம்
மின்னணு – ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு – மொத்ததொகை ஒப்பந்த முறை
மின்னணு – ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண் : 21 / 2025 – 2026 / க.பொ.க (க & ப) வட்டம் / சேலம் நாள்: 15.07.2025
தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சேலம் – 7 அவர்களால் கீழ்க்காணும் பணிகளுக்கு இணையவழி ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. பொதுப்பணித்துறையில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரரர்கள் இணையவழி மூலம் “https://tntenders.gov.in” ஒப்பந்தப்புள்ளியை 22.07.2025 முதல் 07.08.2025 அன்று பிற்பகல் 3.00 மணி வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இணையவழி மூலம் “https://tntenders.gov.in” பதிவிறக்கம் செய்த ஒப்பந்தப்புள்ளியை 07.08.2025 பிற்பகல் 3.00 மணிக்குள் இணையவழி மூலம் “https://tntenders.gov.in” பதிவேற்றம் செய்யலாம். பதிவேற்றம் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 07.08.2025ல் பிற்பகல் 3.30 மணி முதல் இணையவழி மூலம் “https://tntenders.gov.in” திறக்கப்படும்.
NABARD RIDF XXXI திட்டத்தின் கீழ் அரசு உயர் / மேல்நிலைப்பள்ளிகளில் அடிப்படை உள் கட்டமைப்பு வசதி செய்தல்.
கிருஷ்ணகிரி மாவட்டத்தில் (1) காவேரிப்பட்டிணம் (பெ) (2) ஊத்தங்கரை (ஆ) (3) அஞ்செட்டி (4) காரப்பட்டு (மாதிரி) (5) இராயக்கோட்டை (ஆ) (6) சூளகிரி (ஆ) (7) வேலம்பட்டி (8) கெலமங்கலம் (9) போச்சம்பள்ளி (பெ) (10) சிங்காரப்பேட்டை (பெ) (11) நல்லூர் (12) மோரணஹள்ளி (13) அலேசிபம் (14) கெலமங்கலம் (பெ) (15) குந்தாரப்பள்ளி (16) ராமாபுரம் (17) அரசம்பட்டி (18) மகனூர்பட்டி (19) இம்மிடிநாய்க்கனபள்ளி (20) வேப்பனபள்ளி (மாதிரி) (21) அந்தேவனபள்ளி (22) நடுபையூர் (23) புக்கசாகரம் (தெலுங்கு) (24) பத்தகொட்டா (25) சின்னகொத்தூர் (26) உலகம் (27) பாண்டுரங்கன் தொட்டி (28) மாதேபட்டி.
பணிகளின் பெயர் முன் வைப்புத்தொகை செலுத்த வேண்டிய விவரம் மற்றும் இதர விவரங்கள் மற்றும் விதிமுறைகளை அரசு இணையத்தளத்திலும் “https://tntenders.gov.in” தெரிந்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளில் மாற்றம் ஏற்படின் அது பற்றிய விவரம் வளைத்தளம் “https://tntenders.gov.in”ல் பதிவேற்றம் செய்யப்படும்.
கண்காணிப்புப் பொறியாளர், பொபது.,
கட்டட (க & ப) வட்டம், சேலம் – 7.
செ.ம.தொ.இ/3622/ஒப்பந்தப்புள்ளி/2025

# 2028 லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்:
# கிரிக்கெட் போட்டிகான தேதி அறிவிப்பு

**லண்டன், ஜூலை 17-**

லாஸ் ஏஞ்சல்சில் நடைபெறும் ஒலிம்பிக்-2028ல் கிரிக்கெட் போட்டிகள் ஜூலை 12-ம் தேதி முதல் 29-ம் தேதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.




**டி-20 வடிவத்தில்...**

லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கில் கிரிக்கெட் விளையாட்டு மீண்டும் அரங்கேற்றப்பட உள்ளது. இந்த ஒலிம்பிக்கிற்கான கிரிக்கெட் அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. இறுதியாக, 1900-ம் ஆண்டு பாரிஸ் ஒலிம்பிக்கில் கிரிக்கெட் சேர்க்கப்பட்டது. இந்நிலையில், லாஸ் ஏஞ்சல்சில் நடைபெறும் ஒலிம்பிக்-2028ல் கிரிக்கெட் போட்டிகள் ஜூலை 12-ம் தேதி முதல் 29-ம் தேதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஒலிம்பிக் கிரிக்கெட் போட்டிகள் டி20 வடிவத்தில் நடைபெறும்.

**இரு போட்டிகள்...**

தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களுக்காக அணிகளுக்கு இடையே போட்டி நடக்கும். பதக்கத்துக்கான போட்டிகள் ஜூலை 20 (பெண்கள்) மற்றும் 29 (ஆண்கள்) ஆகிய தேதிகளில் நடைபெறும். ஒவ்வொரு நாளும் இரு போட்டிகள் நடைபெறும். இந்தப் போட்டிகள் இந்திய நேரப்படி முறையே இரவு 9.30 மணிக்கும், காலை 7 மணிக்கும் தொடங்கும். ஐசிசி டி20 தரவரிசையில் முதல் 6 இடங்களைப் பிடிக்கும் அணிகள் ஒலிம்பிக்கிற்கு தகுதி பெறும்.

அனைத்துப் போட்டிகளும் லாஸ் ஏஞ்சல்சில் இருந்து சுமார் 50 கி.மீ. தொலைவில் உள்ள பொமோனாவின் ஃபேர்லேக்கில் கட்டப்பட்ட தற்காலிக மைதானத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# ரோகித், விராட் கோலி ஓய்வு குறித்து முதல்முறையாக பி.சி.சி.ஐ. விளக்கம்

**மும்பை, ஜூலை 17-**

ரோகித், விராட் கோலி ஓய்வு குறித்து முதல்முறையாக பி.சி.சி.ஐ. விளக்கமளித்துள்ளது. பி.சி.சி.ஐ. துணைத் தலைவர் ராஜீவ் சுக்லா இது குறித்து விளக்கமளித்துள்ளார்.

**டி-20 கேப்டனாக...**

இந்திய கிரிக்கெட் அணியின் 3 நிலைக்கும் (டெஸ்ட், ஒருநாள் போட்டி, 20 ஓவர்) கேப்டனாக பணியாற்றியவர் ரோகித்சர்மா. அமெரிக்காவில் நடந்த 20 ஓவர் உலக கோப்பையை வென்ற பிறகு ரோகித்சர்மா ஓய்வு பெற்றார். இதனால் 20 ஓவர் போட்டிக்கான அணியின் கேப்டனாக சூர்ய குமார் யாதவ் நியமிக்கப்பட்டார்.

**ஓய்வு அறிவிப்பு...**

இதற்கிடையே இந்திய அணி இங்கிலாந்து சுற்றுப் பயணம் செய்வதற்கு முன்பு ரோகித் சர்மா டெஸ்டில் இருந்து ஓய்வு பெற்றார். அதை தொடர்ந்து உலகின் தலைசிறந்த பேட்ஸ்மேனான வீராட் கோலியும் டெஸ்டில் இருந்து திடீர் ஓய்வு முடிவை அறிவித்தார். அவரும் ஏற்கனவே 20 ஓவர் போட்டியில் இருந்து ஓய்வு பெற்று விட்டார். இருவரும் ஒருநாள் போட்டியில் மட்டும் விளையாடுவதாக தெரிவித்தனர்.

**கில் கேப்டனாக...**



ரோகித் சர்மா, வீராட் கோலி டெஸ்டில் இருந்து ஓய்வு அறிவித்தது ஆச்சரியமானது. ஏனென்றால் ஆஸ்திரேலிய பயணத்தில் இருவரது ஆட்டமும் மோசமாக இருந்ததால் தொடர் முடிந்த பிறகே இந்த முடிவை எடுத்து இருக்க வேண்டும். இங்கிலாந்து பயணத்துக்கு சற்று முன்பு தான் அவர்கள் இந்த முடிவை எடுத்தனர். கோலி, ரோகித் சர்மா இல்லாமல் சுப்மன் கில் தலைமையிலான இந்திய அணி 5 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் 3 டெஸ்ட் முடிவில் 1-2 என்ற கணக்கில் பின்தங்கியுள்ளது.

**வீரரின் சொந்த முடிவு...**

இந்த நிலையில் கோலி, ரோகித் சர்மா ஓய்வு தொடர்பாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பி.சி.சி.ஐ) முதல் முறையாக மவுனம் கலைத்துள்ளது. இருவரையும் ஓய்வு பெற கட்டாயப்படுத்தியதாக வெளியான தகவலை மறுத்துள்ளது. இது தொடர்பாக பி.சி.சி.ஐ. துணைத் தலைவர் ராஜீவ் சுக்லா கூறிய தாவது:- ஓய்வு பெறுவது ஒரு வீரரின் சொந்த முடிவு. கிரிக்கெட் வாரியத்தில் இருந்து யாரும் இந்த முடிவை எடுக்க கட்டாயப்படுத்த முடியாது.

**தாங்களாகவே...**

நான் தெளிவாகக் கூற விரும்புகிறேன். ரோகித் சர்மா, வீராட் கோலி இல்லாததை நாம் அனைவரும் உணர்கிறோம். ஓய்வு பெறும் முடிவை இருவரும் தாங்களாகவே எடுத்தனர்.

எந்த வீரரையும் ஓய்வு பெற சொல்லக்கூடாது என்பது பி.சி.சி.ஐ. யின் கொள்கையாகும். ஓய்வு அவர்களின் விருப்பமே. ஓய்வு பெறுமாறு அவர்களை கிரிக்கெட் வாரியம் கட்டாயப்படுத்த வில்லை.

அவர்களாகவே ஓய்வு பெற்றுள்ளனர். நாங்கள் எப்போதும் அவர்களுடன் இருப்போம். நாங்கள் எப்போதும் அவர்களை புகழ்பெற்ற பேட்ஸ்மேன்களாக கருதுவோம். இருவரும் ஒருநாள் போட்டிகளில் தொடர்ந்து ஆடுவது எங்களுக்கு மிகவும் நல்லது. இவ்வாறு ராஜீவ் சுக்லா கூறினார்.

# ஐ.சி.சி. பேட்ஸ்மேன் தரவரிசை: ஜோ ரூட் மீண்டும் முதலிடம்

**லண்டன், ஜூலை 17-**

ஐ.சி.சி. பேட்ஸ்மேன் தரவரிசையில் இங்கிலாந்து அணி வீரர் ஜோ ரூட் மீண்டும் முதலிடம் பிடித்துள்ளார். இந்திய வீரர்கள் ஜெய்ஸ்வால், ரிஷப் பண்ட், சுப்மன் கில் ஆகியோர் முறையே 5, 8 மற்றும் 9ஆவது இடத்தை பிடித்துள்ளனர்.

**லார்ட்ஸ் மைதானம்...**

இந்தியா- இங்கிலாந்து இடையிலான 3ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்றது. பரபரப்பான இந்த போட்டியில் இங்கிலாந்து 22 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இங்கிலாந்து, இந்தியா முதல் இன்னிங்சில் 387 ரன்கள் சேர்த்தன. 2ஆவது இன்னிங்சில் இங்கிலாந்து 192 ரன்கள் அடித்தது. 193 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய இந்திய அணி 170 ரன்னில் ஆல்அவுட் ஆனது.



**மீண்டும் முதலிடம்...**

இந்த போட்டியில் இங்கிலாந்து பேட்ஸ்மேன் ஜோ ரூட் முதல் இன்னிங்சில் சதம் விளாசினார். 2ஆவது இன்னிங்சில் 40 ரன்கள் சேர்த்தார். இதன்மூலம் ஐ.சி.சி. டெஸ்ட் பேட்ஸ்மேன் தரவரிசையில் மீண்டும் முதலிடம் பிடித்துள்ளார். கேன் வில்லியம்சன் 2ஆவது இடத்திலும், ஹாரி ப்ரூக் 3ஆவது இடத்திலும் உள்ளனர். இந்திய வீரர்கள் ஜெய்ஸ்வால், ரிஷப் பண்ட், சுப்மன் கில் ஆகியோர் முறையே 5, 8 மற்றும் 9ஆவது இடத்தை பிடித்துள்ளனர்.


# மகளிர் டி-20 தரவரிசை: டாப் 10-ல் ஷபாலி வர்மா

**லண்டன், ஜூலை 17-**

மகளிர் டி-20 ஐ.சி.சி. தரவரிசை பட்டியலில் இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஷபாலி வர்மா 4 இடங்கள் முன்னேறி 9-ம் இடத்தைப் பிடித்துள்ளார்.

**டி20 தரவரிசை...**

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் வீராங்கனைகளுக்கான டி20 தரவரிசைப் பட்டியலை நேற்று வெளியிட்டது. இதில் பேட்டர்களுக்கான தரவரிசையில் ஆஸ்திரேலியாவின் பெத் மூனி முதலிடத்திலும், வெஸ்ட் இண்டீஸின் ஹீலி மேத்யூஸ் 2-ம் இடத்திலும், இந்திய அணியின் ஸ்மிருதி மந்தனா 3-வது இடத்திலும் உள்ளனர். இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஷபாலி வர்மா 4 இடங்கள் முன்னேறி 9-ம் இடத்தைப் பிடித்துள்ளார்.



**ஜெமிமா ரோட்ரிக்ஸ்...**

அதேசமயம் இங்கிலாந்து வீராங்கனை நாட் ஸ்கைவர் பிரண்ட் ஒரு இடம் பின் தங்கிய 10-ம் இடத்தையும், டேனியல் வையட் ஹாட்ஜ் ஒரு இடம் முன்னேறி 13-வது இடத்தையும், இந்திய அணியின் ஜெமிமா ரோட்ரிக்ஸ் 2 இடங்கள் பின் தங்கி 14-ம் இடத்தையும் பிடித்துள்ளனர்.

**தீப்தி சர்மா 3-ம் இடம்...**

பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் பாகிஸ்தானின் சதியா இக்பால் முதல் இடத்தில் தொடரும் நிலையில், ஆஸ்திரேலியாவின் அனபெல் சதர்லேண்ட் ஒரு இடம் முன்னேறி 2-ம் இடத்தைப் பிடித்துள்ளார். அதேசமயம் இந்திய வீராங்கனை தீப்தி சர்மா ஒரு இடம் பின் தங்கி 3-ம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார்.

**ரேனுகா சிங் சரிவு...**

மற்றொரு இந்திய வீராங்கனை ரேனுகா சிங் 5 இடங்கள் பின் தங்கி 11-ம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ள நிலையில், ராதா யாதவ் 3 இடங்கள் முன்னேறி 15-ம் இடத்தைப் பிடித்துள்ளார். இந்த பட்டியலில் இந்திய அணி அறிமுக வீராங்கனை ஸ்ரீ சாரணி 49 இடங்கள் முன்னேற்றம் கண்டுள்ளார்.

## தோல்வி குறித்து சிராஜ்

லார்ட்ஸ் மைதானத்தில் நடந்த 3 ஆவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணியிடம் இந்திய அணி.போராடித் தோற்றது.ஜடேஜா தனி ஆளாக கடைசி வரை போராடிய நிலையில் 22 ரன்கள் வித்தியாசத்தில் வென்று, 5 போட்டிகள் கொண்ட தொடரில் 2-1 என முன்னிலை பெற்றது இங்கிலாந்து அணி. இறுதிவரை போராடிய ஜடேஜா 61 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இந்த டெஸ்டில் கடைசி விக்கெட்டாக சிராஜ் ஆட்டமிழந்ததும் துக்கம் தாங்காமல் தரையில் அமர்ந்தார். அப்போது இங்கிலாந்து அணி வீரர்கள் அவரை சமாதானப்படுத்தினர். இந்நிலையில், லார்ட்ஸ் டெஸ்ட் தோல்வி குறித்து முகமது சிராஜ் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். அவரது பதிவில், "சில போட்டிகள் மட்டுமே எப்போதும் உங்களுடன் இருக்கும். அது அந்த போட்டியின் முடிவுகளால் அல்ல, அதிக உங்களுக்கு கற்றுக்கொடுத்த பாடத்தினால்" என்று பதிவிட்டுள்ளார்.

## இங்கி. மன்னருடன் கில்

இந்தியாவுக்கு எதிரான 3-வது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி திரில் வெற்றி பெற்றது. ஜடேஜா வெற்றிக்காக இறுதி வரை போராடியது அனைவரது பாராட்டையும் பெற்றது. இதற்கிடையே, இந்திய அணி வீரர்கள் மற்றும் இந்திய அணி வீராங்கனைகள் நேற்று இங்கிலாந்து மூன்றாம் மன்னர் சார்லசை, லண்டனில் உள்ள கிளாரன்ஸ் ஹவுசில் சந்தித்துப் பேசினர்.பிரிட்டனுக்கான இந்திய தூதர் விக்ரம் துரைசாமி, இந்திய கிரிக்கெட் போர்டு துணைத் தலைவர் ராஜிவ் சுக்லா ஆகியோர் உடன் இருந்தனர்.

இந்நிலையில், இங்கிலாந்து மன்னருடனான சந்திப்பு குறித்து இந்திய அணி கேப்டன் சுப்மன் கில் கூறியதாவது: மன்னர் சார்லசைச் சந்தித்தது வியப்பாக இருந்தது. எங்களிடம், 'கடைசி பேட்டரான சிராஜ் அவுட்டானது துரதிருஷ்டவசமானது. பந்து உருண்டு சென்று ஸ்டம்சை தகர்த்தது. உங்கள் உணர்வு எப்படி இருந்தது?' என கேட்டார். இதற்கு, 'லார்ட்ஸ் டெஸ்ட் முடிவு துரதிருஷ்டவசமானது.

அடுத்த இரு போட்டியில் சிறப்பாக செயல்பட முடியும் என நம்புகிறோம்' என தெரிவித்தோம். மற்றபடி லார்ட்ஸ் டெஸ்ட் கடைசி 3 நாளில் ரசிகர்கள் ஆதரவு எங்களுக்கு அதிகமாக இருந்தது.

இதுபோன்ற ரசிகர்கள் கிடைத்துள்ளது உண்மையில் எங்களது அதிர்ஷ்டம் தான். போட்டி 5-வது நாள் கடைசி வரை சென்று 22 ரன்னில் தோற்றாலும், உண்மையில் இங்கு கிரிக்கெட் வெற்றி பெற்றுள்ளது என தெரிவித்தார்.

## வளர்ப்பு நாய்களுடன் தோனி

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் எம்.எஸ்.தோனி கடந்த 2010 ஆம் ஆண்டு ஜூலை 4ஆம் தேதி சாக்சி என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார். எம்.எஸ்.தோனி - சாக்சி தம்பதிக்கு ஸிவா என்ற ஒரு மகள் இருக்கிறாள்.

எம்.எஸ்.தோனி செல்லப்பிராணிகள் என்றால் மிகவும் பிடிக்கும். அவர் தனது வீட்டில் நாய்களை வளர்த்து வருகிறார். இந்நிலையில், வளர்ப்பு நாய்களுடன் எம்.எஸ்.தோனி கொஞ்சி விளையாடும் புகைப்படங்களை அவரது மனைவி சாக்சி தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். இந்த புகைப்படங்கள் தற்போது இணையத்தில் வைரலாகியுள்ளது.

## இந்தியா வரும் உசைன் போல்ட்

ஜமைக்கா நாட்டை சேர்ந்த முன்னாள் பிரபல ஓட்டப்பந்தய வீரர் உசைன் போல்ட். 100 மீட்டர் ஓட்டத்தில் உலக சாதனையாளரான அவர் ஒலிம்பிக்கில் 8 தங்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

இந்த நிலையில் உசைன் போல்ட் செப்டம்பர் மாதம் இந்தியா வருகிறார். செப்டம்பர் 26-ந்தேதி முதல் 28-ந்தேதி வரை டெல்லி, மும்பையில் நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கேற்கிறார். இது குறித்து உசைன் போல்ட் கூறியதாவது:-

இந்தியாவுக்கு செல்வதை மிகவும் ஆவலுடன் எதிர்நோக்குகிறேன். மிகவும் உற்சாகத்துடன் இருக்கிறேன். இந்திய மக்கள் விளையாட்டின் மீது அதிக ஆர்வம் கொண்டவர்கள். எனக்கு இந்தியாவில் அதிகமான ரசிகர்கள் உள்ளனர்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார். உசைன் போல்ட் இந்தியா வர இருப்பது 2-வது முறையாகும். ஏற்கனவே அவர் 2014-ம் ஆண்டு வந்திருந்தார்.

# ஆட்சி அதிகாரத்தில் பங்கா? பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் விளக்கம்

**விழுப்புரம், ஜூலை 17-**

தேர்தலில் ஆட்சி அதிகாரத்தில் பங்கு என அன்புமணி ராமதாஸ் பேசியது அவருடைய கருத்து என்று ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் தைலாபுரத்தில் பா.ம.க.வின் 37-வது ஆண்டு விழா நடைபெற்றது. பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் தைலாபுரம் தோட்டத்தில் உள்ள பெரியார், கார்ல் மார்க்ஸ், அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பா.ம.க. கட்சிக்கொடியை அவர் ஏற்றி வைத்து தொண்டர்களுக்கு இனிப்புகள் வழங்கினார். பா.ம.க.வின் 37-வது ஆண்டு விழாவில் கட்சி தொண்டர்கள் பங்கேற்றனர். தலைவர் அன்புமணி விழாவை புறக்கணித்தார்.

இந்நிலையில் வரும் தேர்தலில் ஆட்சி, அதிகாரத்தில் பங்கு என அன்புமணி கூறியது குறித்து செய்தியாளரின் கேள்விக்கு எழுப்பினர். அதற்கு பதில் அளித்த ராமதாஸ், தேர்தலில் ஆட்சி அதிகாரத்தில் பங்கு என அன்புமணி பேசியது அவருடைய கருத்து என்று கூறினார்.

# காஷ்மீருக்கு மாநில அந்தஸ்து: பிரதமருக்கு ராகுல் காந்தி கடிதம்

**புதுடில்லி, ஜூலை 17-**

வரும் பார்லிமென்ட் கூட்டத்தொடரில் ஜம்மு காஷ்மீருக்கு முழு மாநில அந்தஸ்து வழங்க சட்ட மசோதா கொண்டு வர வேண்டும் என லோக்சபா எதிர்க்கட்சி தலைவர் ராகுல் வலியுறுத்தி உள்ளார்.

கடந்த 2019ம் ஆண்டு ஜம்மு காஷ்மீர் மாநிலத்துக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் 370வது சட்டப்பிரிவை மத்திய அரசு ரத்து செய்தது. மேலும் ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் என இரண்டாக பிரித்து யூனியன் பிரதேசமாக மாற்றியது.காஷ்மீரில் நிலைமை மேம்பட்டதும், மாநில அந்தஸ்து வழங்கப்படும் என மத்திய அரசு தெரிவித்து இருந்தது.

இந்நிலையில், பிரதமர் மோடிக்கு எழுதிய கடிதத்தில் ராகுல் கூறியுள்ளதாவது: யூனியன் பிரதேசமான ஜம்மு காஷ்மீருக்கு முழு மாநில அந்தஸ்து அளிக்கும் வகையில், வரும் பார்லிமென்ட் கூட்டத்தொடரில் சட்டத்திருத்தம் கொண்டு வர வேண்டும். பல கூட்டங்களிலும், தனிப்பட்ட முறையிலும், காஷ்மீருக்கு மாநில அந்தஸ்து வழங்கப்படும் என அரசு உறுதிபூண்டுள்ளதாக வாக்குறுதி அளித்துள்ளீர்கள்.

கடந்த 2024ம் ஆண்டு மே 19 ல் புவனேஸ்வரில் அளித்த பேட்டி ஒன்றில், காஷ்மீருக்கு மாநில அந்தஸ்து வழங்குவது என்ற வாக்குறுதியில் உறுதியாக நிற்கிறோம் என்றீர்கள். 2024 செப்., 19ல் ஸ்ரீநகரில் பேசும்போதும், மாநில அந்தஸ்து வழங்குவது என பார்லிமென்டில் பேசி உள்ளோம் எனக்கூறி உள்ளீர்கள்.ஒரு மாநிலம் யூனியன் பிரதேசமாக மாற்றப்படுவது இதுவே முதல்முறையாகும். கடந்த ஐந்து ஆண்டுகளாக ஜம்மு காஷ்மீர் மக்கள் மாநில அந்தஸ்து வேண்டும் என கேட்டு வருகின்றனர். அது அவர்களது அரசியல்சாசன மற்றும் ஜனநாயக உரிமை. இவ்வாறு அந்த கடிதத்தில் ராகுல் கூறியுள்ளார்.

# இன்று தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டம்

**சென்னை, ஜூலை 17-**

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டம் என துரைமுருகன் அறிவித்துள்ளார்.;

தமிழக சட்டசபை தேர்தலுக்கு இன்னும் 10 மாதங்களே இருக்கும் நிலையில், அதை எதிர்கொள்ள ஆளுங்கட்சியான தி.மு.க. முன்கூட்டியே தயாராகிவருகிறது. இந்த நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நடைபெற உள்ளது. இதற்கான அறிவிப்பை கட்சியின் பொதுச் செயலாளர் துரைமுருகன் வெளியிட்டுள்ளார்.

அதில் கூறப்பட்டுள்ளதாவது:-"தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் மாவட்ட செயலாளர்கள் கூட்டம் 17-7-2025 வியாழக்கிழமை காலை 10 மணிக்கு காணொலிக்காட்சி வாயிலாக நடைபெறும். அதில், மாவட்ட செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். கூட்டத்தில் ஓரணியில் தமிழ்நாடு - உறுப்பினர் சேர்க்கை தொடர்பாக விவாதிக்கப்பட இருக்கிறது."

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கல்லூரி மாணவர்களுக்கு லேப்டாப்: டெண்டரில் 3 நிறுவனங்கள் விண்ணப்பம்

**சென்னை, ஜூலை 17-**

கல்லூரி மாணவர்களுக்கு லேப்டாப் வழங்குவதற்கான சர்வதேச டெண்டரை தமிழக அரசு கடந்த மே மாதம் வெளியிட்ட நிலையில், டெண்டரில் 3 நிறுவனங்கள் விண்ணப்பம் அளித்துள்ளன.

தமிழக அரசின் 2025-26-ம் ஆண்டு பட்ஜெட் கடந்த மார்ச் மாதம் 14-ந்தேதி தாக்கல் செய்யப்பட்டது. இதில், 'தமிழகத்தில் பல்வேறு கலை, அறிவியல், என்ஜினீயரிங், வேளாண்மை மற்றும் மருத்துவம் உள்ளிட்ட அனைத்து கல்லூரிகளிலும் படித்து வரும் மாணவர்களுக்கு உயர் தொழில்நுட்ப சாதனங்களை வழங்க அரசு திட்டமிட்டு உள்ளது

முதல்கட்டமாக அடுத்த 2 ஆண்டுகளில், 20 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு அவரவர் விருப்பத்தின் அடிப்படையில், ஒவ்வொருவருக்கும் லேப்டாப் வழங்கப்படும்' என அறிவிக்கப்பட்டது. இந்த சூழலில், 20 லட்சம் லேப்டாப் வழங்குவதற்கான சர்வதேச டெண்டரை தமிழக அரசு கடந்த மே மாதம் வெளியிட்டது. இந்த டெண்டரில், லேப்டாப் தயாரிப்பின் முன்னணி நிறுவனங்கள் பல ஆர்வம் காட்டின.

இந்த நிலையில், கல்லூரி மாணவர்களுக்கு விலையில்லா லேப்டாப் வழங்கும் திட்டத்தில் 20 லட்சம் லேப்டாப்களை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்த புள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன. ஏசர், டெல், எச்.பி, (Acer, Dell, HP) ஆகிய 3 நிறுவனங்கள் பங்கேற்று ஒப்பந்த புள்ளிகளை சமர்ப்பித்துள்ளன. தேர்வு செய்யப்படும் நிறுவனங்களிடம் இருந்து லேப்டாப் விலை தொடர்பான தொழில்நுட்ப ஒப்பந்த புள்ளி பெறப்படும். தொடர்ந்து ஒப்பந்த புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு, கொள்முதல் செய்வதற்கான ஆணைகளை நிறுவனங்களுக்கு வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தயாரிப்பு நிறுவனத்திற்கு எதிராக ரூ.9 கோடி இழப்பீடு கேட்டு நடிகர் ரவி மோகன் வழக்கு

**சென்னை, ஜூலை 17-**

படத் தயாரிப்பு நிறுவனத்திடம் ரூ.9 கோடி இழப்பீடு கேட்டு நடிகர் ரவி மோகன் வழக்கு தொடர்ந்துள்ளார்.

சென்னை ஐகோர்ட்டில், பாபிடச் கோல்டு யுனிவர்சல் பிரைவேட் லிமிட்டெட் நிறுவனத்தின் இயக்குனர் பாலசந்திரன் தாக்கல் செய்துள்ள மனுவில், "எங்களது நிறுவனத்தின் சார்பில் நடிகர் ரவி மோகனை வைத்து 2 படங்கள் தயாரிக்க திட்டமிட்டு, அவருடன் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் ஒப்பந்தம் செய்தோம். முதல் படத்துக்கு ரூ.15 கோடி ஊதியமாக பேசப்பட்டு, ரூ.6 கோடி முன்பணமாக கொடுக்கப்பட்டது.

இந்த நிலையில், ஒப்பந்தத்தை மீறி மற்ற நிறுவனங்கள் படங்களில் அவர் நடித்ததால், கொடுத்த முன்பணத்தை ரவி மோகனிடம் திருப்பிக் கேட்டோம். அதற்கு அவர் முன்பணத்தை திருப்பி கொடுப்பதாகவும், ஒப்பந்தத்தில் இருந்து விலகிக்கொள்வதாகவும் கூறினார். ஆனால் இதுவரையில் முன்பணம் ரூ.6 கோடியை திருப்பித்தரவில்லை. தற்போது ரவி மோகன் தனது சொந்த படத்தயாரிப்பு நிறுவனம் மூலமாக புதிதாக 'ப்ரோகோட்' என்ற படத்தை தயாரிப்பதாக அறிவிப்பு வெளியிட்டுள்ளார். எனவே, எங்களிடம் வாங்கிய முன்பணம் ரூ.6 கோடியை வட்டியுடன் திருப்பித்தர ரவி மோகனுக்கு உத்தரவிட வேண்டும்" என்று கூறியிருந்தார். இந்த மனு மீதான விசாரணை நீதிபதி அப்துல் குத்தூஸ் முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான வக்கீல் விஜயன் சுப்பிரமணியன், "மனுதாரர் நிறுவனத்திடம் பெற்ற முன்பணம் ரூ.6 கோடியை ரவி மோகன் தனது சொந்த படத்தயாரிப்புக்காக பயன்படுத்த வாய்ப்புள்ளதால், ரூ.6 கோடிக்கான உத்தரவாதத்தை தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டும்" என்று வாதிட்டார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்த நடிகர் ரவி மோகன் தரப்பு வக்கீல் எஸ்.கார்த்திகை பாலன், "நடிகர் ரவி மோகன் மனுதாரரின் நிறுவனத்திடம் முன்பணமாக ரூ.6 கோடி பெற்றது உண்மை தான். ஆனால் கால்ஷீட் கொடுத்தும் படப்பிடிப்பு பணிகளைத் தொடங்காததால் ரவி மோகனுக்கு ஏற்பட்ட பொருளாதார ரீதியிலான பாதிப்புகளுக்கு பொறுப்பேற்று நஷ்டஈடாக ரூ.10 கோடி வழங்க மனுதாரர் தரப்புக்கு உத்தரவிட வேண்டும்" என்று வாதிட்டார். இதையடுத்து, இந்த வழக்கிற்கு நடிகர் ரவி மோகன் தரப்பில் பதில் மனு தாக்கல் செய்யவேண்டும் என்று உத்தரவிட்ட நீதிபதி விசாரணையை வருகிற 23-ந் தேதிக்கு தள்ளிவைத்தார்.

இந்நிலையில் படத் தயாரிப்பு நிறுவனத்திடம் ரூ.9 கோடி இழப்பீடு கேட்டு நடிகர் ரவி மோகன் வழக்கு தொடர்ந்துள்ளார். இதுதொடர்பாக தயாரிப்பு நிறுவனம் பதிலளிக்க சென்னை ஐகோர்ட் உத்தரவு பிறப்பித்துள்ளது. முன்னதாக 80 நாட்கள் கால்ஷீட் கொடுத்தும் படப்பிடிப்பை தொடங்கவில்லை என ரவி புகார் அளித்திருந்தார். சம்பளம் ரூ.6 கோடியை திரும்பத் தரக் கோரி பாபிடச் கோல்டு யுனிவர்சல் தாக்கல் செய்த வழக்குடன் இந்த வழக்கும் சேர்த்து ஒத்திவைக்கப்பட்டது.

# த.வெ.க. 2-வது மாநில மாநாடு: மதுரையில் பூமிபூஜை விழா



**மதுரை, ஜூலை 17-**

த.வெ.க. 2-வது மாநில மாநாடு மதுரையில் நடைபெறவுள்ள நிலையில் அதற்கான பூமிபூஜை கட்சியின் பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் தலைமையில் நேற்று நடைபெற்றது.

தமிழக சட்டசபை தேர்தலுக்கு இன்னும் 10 மாதங்களே இருக்கும் சூழ்நிலையில் தமிழக தேர்தல் களம் இப்போதே சூடுபிடிக்க தொடங்கி விட்டது. அரசியல் கட்சிகள் இடையே கூட்டணி பேச்சுவார்த்தை திரைக்கு பின்னும், முன்னும் தொடங்கி உள்ளன. அதை போல தமிழக சட்டசபை தேர்தலை சந்திக்க தமிழக வெற்றிக் கழகம் தயாராகி வருகிறது.

தேர்தல் தொடர்பாக முக்கிய முடிவுகளை எடுக்க கட்சியின் செயற்குழு கூட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி தமிழக வெற்றிக் கழகத்தின் மாநில செயற்குழு கூட்டம் சென்னையை அடுத்த பனையூரில் கடந்த 4-ம் தேதி நடந்தது. கூட்டத்திற்கு கட்சியின் தலைவர் விஜய் தலைமை தாங்கினார். கூட்டத்தில் திமுக, பாஜகவுடன் கூட்டணி அமைக்க மாட்டோம் என்று விஜய் திட்டவட்டமாக அறிவித்தார். விஜய், சீமானின் அறிவிப்புகளால் தமிழ்நாட்டில் நான்கு முனை போட்டி உறுதியாகி உள்ளது. முன்னதாக நடிகர் விஜய், கடந்த ஆண்டு விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி அருகே வி. சாலை கிராமத்தில் தனது கட்சியின் முதல் மாநாட்டை நடத்தினார்.

இந்நிலையில், தமிழக வெற்றிக் கழகத்தின் 2-வது மாநில மாநாடு மதுரையில் நடக்க இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. மாநாட்டுக்கான பூமிபூஜை நேற்று அதிகாலை நடந்தது. இதில் கட்சியின் பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் கலந்து கொண்டார்.

# வெடி விபத்தில் உயிரிழந்த குடும்பத்தினருக்கு நிவாரணங்கள்: அமைச்சர் நேரில் வழங்கினார்



**விருதுநகர், ஜூலை 17-**
சாத்தூர் ஊராட்சி ஒன்றியம், இ.குமாரலிங்கபுரம் ஊராட்சியில் மாவட்டத்தில் வெவ்வேறு வெடி விபத்துக்களில் உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களுக்கும், நீரில் மூழ்கி மரணமடைந்தவருக்கும் என மொத்தம் 18 நபர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.48.50 இலட்சம் நிவாரணத்தொகைக்கான காசோலைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் சுகபுத்ரா, முன்னிலையில் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் வழங்கினார்.

முதல்வர் பட்டாசு தொழிற்சாலையில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும் மற்றும் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவருக்கும் நிவாரண நிதி வழங்க உத்தரவிட்டிருந்தார். அதன்படி, நாட்டார்மங்கலம் கிராமம், பட்டாசு தொழிற்சாலையில் கடந்த 29.01.2022 அன்று ஏற்பட்ட வெடி விபத்தில் உயிரிழந்த ஒண்டிப்புலிநாயக்கனூர் கிராமத்தை சேர்ந்த நீதிமொழி என்பவருக்கும், நாட்டார்மங்கலம் கிராமத்தை சசிதேவி மற்றும் (தாயார்) சரஸ்வதி என்பவருக்கும், விஸ்வநத்தம் கிராமத்தை சேர்ந்த சர்மிளாதேவி என்பவருக்கும் என உயிரிழந்த 3 நபர்களின் வாரிசுதாரர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.3 லட்சம் வீதம் மொத்தம் ரூ.9 இலட்சம் நிவாரணத்தொகைக்கான காசோலை,என மொத்தம் 18 நபர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.48.50 இலட்சத்திற்கான நிவாரணத் தொகைக்கான காசோலைகளை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் வழங்கினார். இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் ராஜேந்திரன், சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் செங்கோட்டையன், சாத்தூர் வருவாய் கோட்டாட்சியர் கனகராஜ், விருதுநகர் காவல் துணை கண்காணிப்பாளர் யோகேஷ் குமார், அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மேலூரில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம்: அமைச்சர் மூர்த்தி ஆய்வு



**மேலூர், ஜூலை 17-**
பொதுமக்கள் அன்றாடம் அணுகும் அரசு துறைகளில் சேவை திட்டங்களை அவர்களது இல்லங்களுக்கு சென்று வழங்கும் உங்களுடன் ஸ்டாலின் என்னும் இந்த புதிய திட்டம் நேற்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடலூர் மாவட்டத்தில் தொடங்கி வைத்தார். அதில் ஒரு பகுதியாக மதுரை மாவட்டம், மேலூர் நகராட்சிக்கு உட்பட்ட 4, 5, 6 வார்டு சேர்ந்த பொதுமக்களுக்கு சந்தப்பேட்டை சமுதாயக் கூடத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன்குமார் ஆகியோர் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து துறை சார்ந்த அரங்குகளில் மனுக்கள் பதிவு செய்யப்பட்டு வருவதை பார்வையிட்டனர். அங்கு பெறப்பட்ட மனுவுக்கு உடனடி தீர்வாக 2 பயனாளிகளுக்கு பிறப்பு சான்றிதழ், 2 பயனாளிகளுக்கு சொத்து வரி பெயர் மாற்றம், மேலூர் நகர கூட்டுறவு வங்கி சார்பில் ரூபாய் 6.00 இலட்சம் மதிப்பிலான கடன் உதவி பெறுவதற்கான ஆணை உள்ளிட்ட அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.


அருகில் மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன், மேலூர் வருவாய் கோட்டாட்சியர் சங்கீதா, மேலூர் நகர் மன்ற தலைவர் முகமது யாசின், மேலூர் வட்டாட்சியர் செந்தாமரை, நகராட்சி துணைத் தலைவர் இளஞ்செழியன், நகராட்சி பொறியாளர் மற்றும் (ஆணையாளர் பொறுப்பு) முத்துக்குமார், மேலூர் சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் லயனல் ராஜ்குமார், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் நாவினிபட்டி வேலாயுதம், நகர் மன்ற உறுப்பினர்கள், திமுக பொதுக்குழு உறுப்பினர் செல்வராஜ், மற்றும் கட்சி முக்கிய நிர்வாகிகள், உறுப்பினர்கள், பொதுமக்கள் இதில் கலந்து கொண்டனர்.

கிடாரிப்பட்டி கிராமத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை அமைச்சர் பி. மூர்த்தி துவக்கி வைத்து, துறை சார்ந்த அரங்குகளில் மனுக்கள் பதிவு செய்யப்பட்டு வருவதை பார்வையிட்டு பெறப்பட்ட மனுவுக்கு உடனடி தீர்வாக 4 மகளிர் சுயஉதவிக் குழுவிற்கு மொத்தம் ரூபாய் 51.75 லட்சம் மதிப்பில் கடன் உதவி பெறுவதற்கான ஆணைகளை வழங்கினார். ஊரக வளர்ச்சி துணை இயக்குநர் அரவிந்த் மேலூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கா.சுந்தர சாமி, சரஸ்வதி, தலைமையிடத்து மண்டல வட்டார வளர்ச்சி அலுவலர்கள், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அ. வல்லாளபட்டி பேரூராட்சி சேர்மன் குமரன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் கிடாரிபட்டி ஹேமலதா மதிவாணன், அ.வலையபட்டி தீபா தங்கம் மற்றும் திமுக வடக்கு ஒன்றிய பொருளாளர் முத்துபொருள், ஊராட்சி பணியாளர்கள் ஊராட்சி செயலர்கள், தூய்மை பணியாளர்கள், உட்பட கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



**மதுரை மாநகர் மாவட்ட வடக்கு 3-ம் பகுதி அ.தி.மு.க.சார்பில் 24-வது வடக்கு வட்ட செயலாளர் ஜி.எம்.முருகன் தலைமையிலும், பகுதி செயலாளர் ஜெ.மாணிக்கம் முன்னிலையிலும் மீனாட்சிபுரம் பூமி உருண்டை தெருவில் நடைபெற்ற தெருமுனை பிரச்சார பொதுக்கூட்டத்தில் மாவட்டத்துணைச் செயலாளர் வில்லாபுரம் ஜெ.ராஜா சிறப்புரையாற்றினார். அருகில் நிர்வாகிகள் ஆர். அண்ணாதுரை, ஆர்.பாஸ்கரன், வி.பி.ஆர்.செல்வகுமார், சுகந்தி அசோக், பேராசிரியர் ஜெயபால், வி.கணேசன், அண்ணாநகர் ரவிச்சந்திரன், சேகர், கவிச்செல்வம் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.**

# திருமலைக்கேணியில் சஷ்டி பூஜை



**நத்தம், ஜூலை 17-**
திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே திருமலைக்கேணி சுப்பிரமணிய சுவாமி கோவிலில் ஆனி மாத தேய்பிறை சஷ்டி பூஜை விழா நடந்தது. இதையொட்டி முருக பெருமானுக்கு பால்,பழம்,பன்னீர், விபூதி,சந்தனம், புஷ்பம் உள்ளிட்ட 16 வகையான அபிஷேகங்களும், சிறப்பு அலங்காரமும், தீபாராதனைகளும் நடந்தது.மேலும் அருகிலுள்ள காமாட்சி மவுன குருசாமி மடத்திலும் சிறப்பு பூஜைகள் நடந்தது.

இதில் சுற்றுவட்டாரங்களிலிருந்து ஏராளமான பக்தர்கள் கோவிலுக்கு வந்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர். இதைபோலவே நத்தம் கோவில்பட்டி கைலாசநாதர் கோவில் உள்பிரகாரத்தில் அமைந்துள்ள தண்டபாணி சன்னதியிலும், குட்டூர் உண்ணாமுலை அம்பாள் கோவிலில் உள்ள முருகப்பெருமான் சன்னதியிலும் சஷ்டியையொட்டி சிறப்பு பூஜைகள் நடந்தது.இங்கும் பக்தர்கள் கலந்து கொண்டனர்.

# ஒட்டன்சத்திரத்தில் நாட்டு நலப்பணி திட்ட அலுவலர்களுக்கு புத்தாக்க பயிற்சி




**ஒட்டன்சத்திரம், ஜூலை 17-**
திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஆசிரியர் பயிற்சி வளாகத்தில் திண்டுக்கல் மாவட்ட பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் நாட்டு நலப்பணி திட்ட அலுவலர்களுக்கான புத்தாக்க பயிற்சி மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ப.உஷா ஆலோசனையின்பேரில் நடை பெற்றது.

மாவட்ட தொடக்க அலுவலர சண்முகநாதன் முன்னிலை வகித்தார். மாநில உதவித்தொடர்பு அலுவலர் சௌந்தரராஜ் தலைமை வகித்துபயிற்சி வழங்கினார். ஆசிரிய பயிற்சிபள்ளி முதல்வர் சங்கர் சிறப்புரையாற்றினார் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 50 க்கு மேற்பட்ட அரசு தனியார் மேல்நிலைப் பள்ளி திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முடிவில் திட்ட அலுவலர் விஜயலட்சுமி நன்றி கூறினார். அனைவருக்கும் பதிவேடுகள் வவழங்கப்பட்டது. படம். திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் நாட்டு நலப்பணி திட்ட அலுவலர்களுக்கு புத்தாக்க பயிற்சி வழங்கப்பட்டது.

# நத்தம் அருகே ஆசிரியருக்கு மாணவர்கள் வழியனுப்பி விழா



**நத்தம், ஜூலை 17-**
திண்டுக்கல் ஒய்.எம்.ஆர்பட்டியை சேர்ந்தவர் ஹாஜகான்.இவர் நத்தம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட செந்துறை அருகே பெரியூர்பட்டி அரசு உயர்நிலைபள்ளியில் கணித ஆசிரியராக பணிபுரிந்து வந்தார். இங்கு 10-ம் வகுப்புக்கு கணித ஆசிரியராகவும், 6-ம் வகுப்புக்கு தமிழ் ஆசிரியராகவும் செயல்பட்டு வந்தார். இவர் தமிழ் மீது அதிக பற்று கொண்டவர். எந்த பள்ளிக்கு சென்றாலும் வள்ளுவர், பாரதி, பெரியார் வழியிலே இருக்க வேண்டும் என எண்ணம் கொண்டவர். இவர் கடந்த 1 வருட காலமாக பெரியூர்பட்டி அரசு உயர்நிலைபள்ளியில் பணிபுரிந்து வந்தார்.

அப்போது அங்குள்ள மாணவ, மாணவிகளுக்கு கல்வி கற்று கொடுப்பதில் பல்வேறு யுக்திகளை கையாண்டு மாணவர்களை படிக்க வைத்துள்ளார். மேலும் இவர் பள்ளியிலே கரகாட்டம், ஒயிலாட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகளை தானே செய்தும், விழிப்புணர்வுக்காக பல்வேறு வேடங்கள் அணிந்தும். மாணவ, மாணவிகளை மகிழ்வித்து வந்துள்ளார். இந்நிலையில் இவர் செந்துறை அரசு மேல்நிலைப்பள்ளிக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டார்.

இதற்கான வழியனுப்பு விழா நேற்று முன்தினம் பள்ளியில் நடந்தது. இதில் பள்ளி மாணவ, மாணவிகள் இவரை வேறு பள்ளிக்கு செல்ல வேண்டாம். இங்கேயே இருங்கள் என கூறி அழுதுள்ளனர். அவர்களை தேற்றிய ஆசிரியர் ஷாஜகான் பொம்மை முகமூடி அணிந்து கொண்டு பாடல்களை பாடியபடி நான் சென்று வருகிறேன் என கூறி நடனமாடி சென்றுள்ளார். இதில் சந்தோஷமடைந்த மாணவ, மாணவிகள் அவரை உற்சாகமாக கைகளை தட்டி வழியனுப்பி வைத்தனர்.

# நத்தத்தில் காங்கிரஸ் கட்சி செயல்வீரர்கள் கூட்டம்



**நத்தம், ஜூலை 17-**
திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் தனியார் திருமண மண்டப வளாகத்தில் காங்கிரஸ் கட்சியின் செயல்வீரர்கள் கூட்டம் நடந்தது. இதற்கு வட்டார தலைவர் பழனியப்பன் தலைமை தாங்கினார். மாவட்ட பொறுப்பாளர் மச்சக்காளை, சாணார்பட்டி வட்டார தலைவர்கள் ராஜ்கபூர், ராமகிருஷ்ணன்,நகர பொறுப்பாளர்கள் அப்துல்காதர், பழனிச்சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கிராமங்கள் தோறும் காங்கிரஸ் கட்சிக்கு உறுப்பினர் சேர்ப்பது.

வருகிற ஆகஸ்ட் 1-ம் தேதி திண்டுக்கல்லிற்கு வருகை தரும் மாநில தலைவர் செல்வப்பெருந்தகைக்கு சிறப்பான முறையில் வரவேற்பு அளிப்பது என தீர்மானம் நிறைவேற்றபட்டது. இதில் மாவட்ட நிர்வாகிகள் துரைச்சாமி, சபியுல்லா,ராஜேந்திரன், மணிவண்ணன், ஜாகீர்உசேன் உள்ளிட்ட வட்டார, நகர காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## கிடப்பில் உள்ள பல்வேறு மக்கள் பணிகளை உடனடியாக நிறைவேற்றக்கோரி

# எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார் மதுரை மாவட்ட கலெக்டரிம் நேரில் கோரிக்கை மனு



**மதுரை, ஜூலை 17-**
மதுரை மாவட்டத்தில் கிடப்பில் உள்ள பல்வேறு மக்கள் பணிகளை நிறைவேற்றக்கோரி எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார் மாவட்ட கலெக்டரிம் கோரிக்கை மனு வழங்கினார்.

தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார் ,மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமாரை நேரில் சந்தித்து கோரிக்கை மனு கொடுத்தார். அவருடன் மேலூர் சட்டமன்ற உறுப்பினர் பெரியபுள்ளான் என்ற செல்வம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.எஸ்.சரவணன், மாணிக்கம் ஆகியோர் உடன் இருந்தனர்.

பின்னர் தமிழக எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார் எம்.எல்.ஏ. நிருபர்களிடம் கூறியதாவது-

மதுரை மாவட்டத்தில் ஆட்சித் தலைவராக பொறுப்பேற்ற, மாவட்ட ஆட்சியரை மரியாதை நிமித்தமாக சந்தித்தோம். குறிப்பாக மக்கள் பணிகளை பாரபட்சம் இல்லாமல் செய்ய வேண்டும் என்று எதிர்க்கட்சி சார்பில் கோரிக்கை அளிக்கப்பட்டது. குறிப்பாக 10 கோரிக்கை ஏற்கனவே மனுவாக அளிக்கப்பட்டது. அதை நினைவூட்டப்பட்டது. எடப்பாடியார் மதுரையில் எம்ஜிஆர் நூற்றாண்டு விழாவில் அறிவித்து கொண்டு வரப்பட்ட மதுரை கூட்டு குடிநீர் திட்டத்தை உடனடியாக விரைவுபடுத்தி மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்றும், திருமங்கலம், சோழவந்தான் போன்ற பகுதிகளில் சட்ட விரோதமாக கல்குவாரிகள் செயல்பட்டு வருகிறது இதனால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது உரிய ஆய்வை மேற்கொண்டு இதை முறைப்படுத்த வேண்டும் என்றும்,அதேபோல திருமங்கலம் புதிய பேருந்து நிலையம் அமைக்க ரத்து செய்யப்பட்டு ,பழைய பேருந்து நிலையத்தை சீரமைக்கும் பணி நடைபெற்று வருகிறது, இதனால் தற்காலிக பேருந்து அமைக்கப்பட்டுள்ளது இதில் பல்வேறு அடிப்படை வசதிகள் இல்லை ஆகவே பழைய பேருந்து நிலையத்தை விரைவாக சீர்படுத்த வேண்டும் என்றும், திருமங்கலம் தொகுதி கள்ளிக்குடி ஒன்றியத்தில்

பேய்குளம் கிராமத்தில் உள்ள ஆலை பொதுமக்களுக்கு பல்வேறு புற்றுநோய் உள்ளிட்ட நோய்களை உண்டாக்கும் வகையில் உள்ளது அதை உடனடியாக மூட வேண்டும் என்றும், கப்பலூர் தொழிற்பேட்டையில் 450க்கு மேற்பட்ட தொழிற்சாலைகள் உள்ளது ,குறைந்த மின் அழுத்தம் உள்ளதால் பல்வேறு தொழிற்சாலைகள் தொழில் தொடங்க முன்வரவில்லை ஆகவே அங்கு 33kv துணை மின் நிலையம் அமைக்க வேண்டும் ,அதேபோல திருமங்கலம் சுற்றியுள்ள 75 கிராமங்களில் மின் மாற்றிகள் பழுது ஏற்பட்டுள்ளது உடனியாக புதிய மின் மாற்றிகளை அமைக்க வேண்டும் என்றும்,உரப்பனூர் கண்மாயில் சட்டர்கள் மிகவும் பழுதடைந்து உள்ளது, உடனடியாக இதை மாற்றி புதிய இரும்பு சட்டர்கள் அமைக்க வேண்டும் என்றும், திருமங்கலம் நகரத்தில் திறந்தவெளி சாக்கடை உள்ளது இதை முறைப்படுத்த வேண்டும்,திருமங்கலம் நகரில் இருந்து பல்வேறு போக்குவரத்து வழிதடங்கள் நிறுத்தப்பட்டது உடனடியாக இயக்க வேண்டும் என்றும், குறிப்பாக மதுபானங்கள் சந்து கடைகளில் விற்பனை செய்யப்படுகிறது இது உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என்றும், அதேபோல திருமங்கலம் தொகுதியில் முதியோர் ஓய்வூதிய தொகை நிறுத்தப்பட்டுள்ளது இதை முறைப்படுத்த வேண்டும் என்று கூறப்பட்டது.மேலும் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தை அறிவித்து முதலமைச்சர் சிதம்பரத்தில் தொடங்கி வைத்துள்ளார் ,அரசு அலுவலங்களில் கோரிக்கை வைத்து நடக்காமல் இருக்கும் மனுக்களுக்கு தீர்வு காணும் என்று சொல்லப்பட்டுள்ளது

மகளிர் உரிமை உரிமை தொகை விண்ணப்பம் இந்த முகாமில் கிடைக்கும் என்று கூறப்பட்டுள்ளது, குறிப்பாக ஆளுங்கட்சியினர் இந்த முகாமில் அரசியல் ஆதாயம் தேட முயற்சிக்கிறார்கள் ,இந்த திட்டத்தின் மூலம் தேர்தலை மையமாகக் கொண்டு ஆளுங்கட்சிக்கு மக்களை இழுப்பதாக கூறப்படுகிறது.குறிப்பாக செல்போன் நம்பர் பெறப்படுகிறது ,அந்த நம்பர் திமுக ஐடி விங்கிற்கு அனுப்பப்படுகிறது. இன்றைக்கு மக்களை பிரைன் வாஷ், ஐ வாஷ் செய்யும் ஸ்டாலினுக்கு மக்கள் வாஷ் அவுட் கொடுப்பார்கள்.இன்றைக்கு எடப்பாடியாரின் எழுர்ச்சி பயணத்தில் ஒவ்வொரு தொகுதியிலும் ஒன்றரை லட்சம் மக்கள் திரண்டு வரவேற்பு அளிக்கிறார்கள்.யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே என்பது போல எடப்பாடியார் முதலமைச்சர் வருவார் அதற்கு மக்கள் கடல் அலையே சாட்சி. இவ்வாறு அவர் கூறினார்.

# கள்ளிக்குடி வில்லூரில் நலத்திட்ட உதவிகள்: மாவட்டச் செயலாளர் மணிமாறன் வழங்கினார்




**திருமங்கலம், ஜூலை 17-**
முன்னாள் முதலமைச்சர் கலைஞரின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் ஏற்பாட்டின் பேரில் திருமங்கலம் தொகுதியில் வசித்திடும் சுமார் ஒன்றரை லட்சம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி கள்ளிக்குடி தெற்கு ஒன்றியம் வில்லூர், உவரி கிராமங்களில் நடைபெற்றது.

நலத்திட்ட உதவிகள் வழங்கிடும் விழாவிற்கு மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமை வகித்தார்.கள்ளிக்குடி தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் பா.மதன்குமார் முன்னிலை வகித்து வரவேற்று பேசினார்.

ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்ட இவ்விழாவில் மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் சிறப்பாளராக கலந்து கொண்டு தலைமையேற்று 2000 பேருக்கு நலத்திட்ட உதவிகளை நேரில் வழங்கி சிறப்புரையாற்றினார்.

அப்போது மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் பேசுகையில்: முதல்வர் மு.க.ஸ்டாலின் நாடு போற்றும் நல்லாட்சி நடத்தி வருகிறார். கடந்த 4 ஆண்டுகளில் தேர்தல் வாக்குறுதி அனைத்தையும் நிறைவேற்றி முதல்வர் சாதனை படைத்துள்ளார். கட்சி பாகுபாடு இன்றி கொரோனா நிதி, விடியல் பயணம், வேலை வாய்ப்பு, கல்வி நிதியுதவி, மகளிர் உதவித் தொகையினை அரசு வழங்கி வருகிறது. கழக அரசின் சாதனை திட்டங்கள் தொடர்ந்திட முதல்வர் மு.க.ஸ்டாலின் 2 வது முறையாக தமிழக முதல்வராக வந்திட 2026 சட்டமன்ற தேர்தலில் திமுகவுக்கு நீங்கள் ஆதரவளித்திட வேண்டும் என்று பேசினார்.

இதனை தொடர்ந்து அப்பகுதி மக்கள் ஆயிரக்கணக்கானோருக்கு சிக்கன் பிரியாணியுடன் கூடிய அறுசுவை அசைவ உணவு விருந்தினை மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் துவக்கி வைத்து பரிமாறியதுடன் இளைஞர் கிரிக்கெட் குழுக்களுக்கு கிரிக்கெட் மட்டை பந்து மற்றும் விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்.

இவ்விழாவில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் முத்துராமன், ஞானசேகரன், ஐடி மாநில துணைச் செயலாளர் பாச பிரபு, ஒன்றிய செயலாளர்கள் ராமமூர்த்தி, நாகராஜ்,பாண்டியன், தனசேகரன்,பொதுக்குழு உறுப்பினர் செல்வம், ஆதிமூலம், சிவமுருகன்,நகர்மன்ற தலைவர் ரம்யா முத்துக் குமார், துணை தலைவர் ஆதவன் அதியமான், பேரூர் செயலாளர் வருசை முகமது, மாவட்ட கவுன்சிலர் சரவணபாண்டியன் மாவட்ட அணி அமைப்பாளர்கள் விமல்,செல்வேந்திரன், சிவனேசன்,பாண்டி முருகன், மற்றும் கட்சி நிர்வாகிகள் சுரேஷ்,பி.எம்.சிவா,கவிஸ்ரீதினேஷ், அழகுமலை, வடக்கம்பட்டி ராதாகிருஷ்ணன், ஆறுமுகம்,கருவேலம்பட்டி வெற்றி, காளிதாஸ், ரஞ்சித், முத்து, சூரிசுரேஷ் மற்றும் கள்ளிக்குடி தெற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் மன்னம்பந்தல் ஊராட்சி அம்பேத்கர் தெருவில் "ஓரணியில் தமிழ்நாடு" என்ற முன்னெடுப்பு திட்டத்தில் மக்களை நேரடியாக சந்தித்து உறுப்பினர்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் சேர்த்தார். இந்நிகழ்வின்போது அமைச்சர்கள் கே.என்.நேரு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சிவ.வீ.மெய்யநாதன், சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், ஊராட்சிமன்ற தலைவர் சூர்யா, ஒன்றிய செயலாளர் முருகமணி ஆகியோர் உடனிருந்தனர்.



கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி தேர்தல் பிரச்சாரம் செய்தார். இப்பிரச்சார கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்களும், கட்சியினரும் கலந்து கொண்டனர்.

### 'ஓரணியில் தமிழ்நாடு' திட்டம் மூலம்

# 1 கோடியே 35 லட்சம் பேர் தி.மு.க.வில் இணைந்தனர்

## கட்சி தலைமை அறிவிப்பு

சென்னை, ஜூலை 17-

தி.மு.க.வின் ஓரணியில் தமிழ்நாடு என்ற முன்னெடுப்பு திட்டத்தில் 1 கோடியே 35 லட்சம் பேர் இணைந்துள்ளதாக அக்கட்சி அறிவித்துள்ளது.

இது குறித்து தி.மு.க. வெளியிட்ட செய்திக்குறிப்பு வருமாறு., ஓரணியில் தமிழ் நாடு" என்ற மாபெரும் முன்னெடுப்பு திட்டத்தில் மயிலாடுதுறையில் தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின்மக்களை நேரடியாக சந்தித்து உறுப்பினர்களை சேர்த்தார். அரசின் சாதனைகளை மக்களிடம் எடுத்துச் சொல்லி,தமிழ்நாட்டின் மண் - மொழி - மானம் காக்க தி.மு.க.வில் மக்களை உறுப்பினர்களாக சேர்க்கும் "ஓரணியில் தமிழ்நாடு" என்ற மாபெரும்முன்னெடுப்பு திட்டத்தில் உறுப்பினர்கள் சேர்க்கையை தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் , கடந்த ஜூலை 3 ம் தேதி சென்னை, ஆழ்வார்பேட்டையில் மக்களை நேரடியாக சந்தித்து தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, 10ம் தேதி திருவாரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சன்னதி தெருவில் தி.மு.க. தலைவர் முதலமைச்சர் ஸ்டாலின் , "ஓரணியில் தமிழ்நாடு"என்ற மாபெரும் முன்னெடுப்புதிட்டத்தில், மக்களை நேரடியாக சந்தித்து, இத்திட்டத்தில் உறுப்பினர்களைசேர்த்தார். மேலும், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் கழக தகவல் தொழில்நுட்ப அணியால் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறையை கடந்த 12 ம் தேதி முதலமைச்சர் ஸ்டாலின் திறந்து வைத்து, தி.மு.க. மக்களை உறுப்பினர்களாக சேர்க்கும் "ஓரணியில் தமிழ்நாடுஎன்ற மாபெரும் முன்னெடுப்பு திட்டத்தின் கீழ்தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் இணைக்கப்பட்ட மக்களின் விவரங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

அதன் தொடர்ச்சியாக மயிலாடுதுறை மாவட்டத்திற்கு வருகை தந்த தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் நேற்று ஓரணியில் தமிழ்நாடு என்ற மாபெரும் முன்னெடுப்புதிட்டத்தில் மன்னம்பந்தல் ஊராட்சி, அம்பேத்கர் தெருவில் மக்களை நேரடியாகசந்தித்து உறுப்பினர்களை சேர்த்தார்.

இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்.கே.என். நேரு, வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர்.எம்.ஆர். கே.பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் . சிவ.வீ. மெய்யநாதன், மாவட்ட செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், மன்னம்பந்தல் ஊராட்சி மன்ற தலைவர் சூர்யா, மயிலாடுதுறை கிழக்கு ஒன்றியச் செயலாளர்முருகமணி ஆகியோர் உடனிருந்தனர். முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பை ஏற்று "ஓரணியில் தமிழ்நாடு" என்ற மாபெரும் முன்னெடுப்பு திட்டத்தில் இதுவரை 1,35,43,103 நபர்கள் இணைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



மயிலாடுதுறை மாவட்டம் வழுவூர் முகப்பு சாலையில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞரின் வெண்கல திருவுருவச்சிலையை நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் கே.என்.நேரு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சிவ.வீ.மெய்யநாதன், டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், ஒன்றிய செயலாளர் மங்கை எம்.சங்கர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செ.ராமலிங்கம், உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் பி.கல்யாணம், மாவட்ட வழக்கறிஞர் வி.எஸ்.பிரபாகரன் உடனிருந்தனர்.




தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் வட்டம் அய்யம்பேட்டை டி.கே.ஜி. மஹாலில் அரசுத்துறைகளின் சேவைகளை, மக்களின் இல்லங்களுக்கே சென்று வழங்கும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தினை நேற்று உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் குத்துவிளக்கேற்றி பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், சட்டமன்ற உறுப்பினர் க.அன்பழகன் ஆகியோர் உள்ளனர்.



சென்னை சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதி கோடம்பாக்கம் மண்டலம் வார்டு 140-க்குட்பட்ட சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் ரூ.5.25 கோடி மதிப்பீட்டில் நவீன கலையரங்கம் கட்டுமான பணியினை நேற்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், கோடம்பாக்கம் மண்டலக்குழு தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் எம்.ஸ்ரீதரன், மண்டல அலுவலர் பி.முருகேசன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கடலூர் மாவட்டத்தில்

# விவசாய பிரதிநிதிகளுடன் இ.பி.எஸ். கலந்துரையாடல்

சிதம்பரம், ஜூலை 17-

கடலூர் மாவட்டத்தில் நேற்று விவசாய பிரதிநிதிகளுடன் இ.பி.எஸ். கலந்துரையாடினார்.

கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் விவசாய பிரதிநிதிகளுடன் அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி சந்தித்து பேசினார். இதன்பின் உரையாற்றி எடப்பாடி பழனிசாமி கூறியதாவது:- அ.தி.மு.க. ஆட்சியில் ரூ.12,000 கோடிக்கு மேல் பயிர் கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. அ.தி.மு.க. ஆட்சியில் பல பிரச்சனைகளுக்கு மத்தியிலும் விவசாயிகளுக்கு தேவையான நலத்திட்டங்களை செய்து வந்தோம்.

கலப்பின பசுக்களை உருவாக்கி விவசாயிகளுக்கு இலவசமாக கொடுக்க திட்டம். அ.தி.மு.க. அரசு கொண்டு வந்த பல நல்ல திட்டங்களை தி.மு.க. அரசு நிறுத்திவிட்டது. தொகுதிக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற நினைவு கூட வேளாண் அமைச்சருக்கு இல்லை என்றார்.



மதுரை மாவட்டத்தில் கிடப்பில் உள்ள பல்வேறு மக்கள் பணிகளை நிறைவேற்றக்கோரி மாவட்ட கலெக்டர் பிரவீன்குமாரை நேற்று சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத்தலைவர் ஆர்.பி.உதயகுமார் நேரில் சந்தித்து கோரிக்கை மனுவினை வழங்கினார். அருகில் மேலூர் சட்டமன்ற உறுப்பினர் பி.பெரியபுள்ளான் என்ற செல்வம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.எஸ்.சரவணன், கே.மாணிக்கம், ஏ.கே.பி.சிவசுப்பிரமணி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# 12 புதிய திட்டப்பணிகளுக்கு... (1-ம் பக்க தொடர்ச்சி)

களத்தில் உங்களை நம்பத் தயாராக இல்லை. ஒரு திரைப்பட காமெடியில் வரும் - "அதற்கெல்லாம் நீ இனி சரிப்பட்டு வரமாட்டப்பா" அது போல அவர்கள் ஒரு முடிவுக்கு வந்துவிட்டார்கள்.

**நீங்கள்தான் ஏமாந்து...**

மக்கள் ஏமாறவில்லை, பா.ஜ.க.வை நம்பி நீங்கள் தான் ஏமாந்து போயிருக்கிறீர்கள். உங்கள் சுயநலத்திற்காக, உங்கள் குடும்பத்தினரை ரெய்டிலிருந்து காப்பாற்றுவதற்காக அ.தி.மு.க.வையே டெல்லிக்குச் சென்று அமித்ஷாவிடம் அடமானம் வைத்துவிட்டு வந்திருக்கிறீர்கள். மூன்று கார்... நான்கு கார் என்று மாறி அமித்ஷா வீட்டுக் கதவை தட்டிய கதையைப் பற்றி தம்பி உதயநிதி தான் முதன்முதலில் பேசினார். நீங்கள் என்ன சொல்கிறீர்கள் - "அமித்ஷா-வின் வீட்டுக் கதவை தட்டினால் என்ன தப்பு?" என்று வெட்கமில்லாமல் கேட்கிறீர்கள்? யாருக்காக தட்டினீர்கள்? உங்கள் குடும்பத்தை ரெய்டிலிருந்து காப்பாற்ற – உங்கள் கட்சியையே அடமானம் வைக்கத் தானே தட்டினீர்கள்?

**பாதுகாப்பாக இருக்கும்**

மக்களைப் பொறுத்தவரைக்கும், "ஸ்டாலின் கையில் தமிழ்நாடு பாதுகாப்பாக இருக்கும் – சுயநலத்திற்காக எந்த அந்நிய சக்தியையும் ஸ்டாலின் தமிழ்நாட்டுக்குள் விடமாட்டார், தடுத்து நிறுத்துவார்" என்று நம்பிக்கையோடு மக்கள் வாக்களித்தார்கள். அந்த எதிர்பார்ப்பை - நம்பிக்கையை - உண்மையாக உழைத்து இந்த நான்காண்டு காலத்தில் நான் காப்பாற்றி இருக்கிறேன். வளர்ச்சியில் முதல் மாநிலம் தமிழ்நாடு தான் என்று உங்கள் ஓனரான மத்திய பாஜக அரசே சொல்லும் அளவுக்கு தமிழ்நாட்டை நாங்கள் உயர்த்தி காட்டியிருக்கிறோம்! உறுதியோடு சொல்கிறேன் - அடுத்து அமையப் போவதும் திராவிட மாடல் ஆட்சிதான். திராவிட மாடல் 2.0-வும், இணையற்ற ஆட்சியாக இந்தியாவிலேயே தலைசிறந்த ஆட்சியாகதான் இருக்கும் என்று இப்போதே உறுதி அளிக்கிறேன்.

**அக்கறையில்லை....**

கச்சத்தீவை மீட்க நடவடிக்கை எடுக்காது இன்றும் அரசியல் செய்து வருகிறது மத்திய பா.ஜ.க. அரசு. தமிழர்கள், தமிழக மீனவர்கள் மீது மத்திய பா.ஜ.க. அரசுக்கு அக்கறையில்லை. கச்சத்தீவை தாரை வார்த் து விட் ட தாக தொடர்ந்து அரசியல் பேசி வருகிறார்கள். கச்சத்தீவை மீட்க கடந்த 10 ஆண்டுகளாக மத்திய பா.ஜ.க. அரசு ஒன்றுமே செய்யவில்லை. கச்சத்தீவை தாரைவார்ப்பது மத்திய அரசின் அதிகாரத்திற்கு உட்பட்ட ஒன்று என்று அனைவரும் அறிவர். கச்சத்தீவு பிரச்சனையில் பிரதமர் மோடி நேரடியாக தலையிட வேண்டும்

இவ்வாறு அவர் கூறினார்.

# ஜூலை 30-ல் மருத்துவ... (1-ம் பக்க தொடர்ச்சி)

தகுதிக்கான தூதரக சான்றிதழ்களை போலியாக தந்திருக்கிறார்கள். இந்த சான்றிதழ்களை சரிபார்ப்பதற்கு ஜூலை 18 ஆம் தேதி காலை 10 மணி வரை கடைசி நாளாக அறிவிக்கப்படுள்ளது. விண்ணப்பங்கள் சரிபார்ப்புகள் அனைத்து முடிந்து, இறுதி பட்டியல் வரும் 25 ஆம் தேதி காலை 10 மணிக்கு வெளியிடப்படும். இறுதி பட்டியல் வெளியிடப்பட்டவுடன் மத்திய அரசின் கால அட்டவணைப்படி ஜூலை 30 ஆம் தேதி முதல் கலந்தாய்வு நடைபெறும் என அமைச்சர் கூறினார்.

மேலும், தமிழகத்தில் 36 அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் கே.கே.நகர் இஎஸ்ஐ மருத்துவக் கல்லூரி என 5,200 எம்.பி.பி.எஸ். இடங்கள் உள்ளன. அவற்றில் 888 இடங்கள் அகில இந்திய ஒதுக்கீட்டுக்கு வழங்கப்படுகிறது. தவிர சுயநிதிக் கல்லூரிகளில் 3,450 இடங்கள், தனியார் மருத்துவப் பல்கலைக்கழகங்களில் 550 இடங்கள் எம்.பி.பி.எஸ். படிப்புகளுக்கு உள்ளன. மொத்தமாக அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் 9,200 எம்.பி.பி.எஸ். இடங்களுக்கு கலந்தாய்வு நடத்தப்படுகிறது.




சென்னை கிண்டி அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் சார்பில் புத்தாக்க கண்டுபிடிப்பு கண்காட்சியினை திறந்து வைத்து பள்ளி மாணவர்களின் புத்தாக்க கண்டுபிடிப்புகளை பாராட்டி மாணவர்களுக்கு காசோலைகளை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். இந்நிகழ்வில் கூடுதல் தலைமைச்செயலாளர் அதுல்ஆனந்த், இயக்குநர் இரா. அம்பலவாணன், துணை இயக்குநர் நா.கமலக்கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.